# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

நவம்பர் 2005 ஜீவியம் 11 மலர் 7

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *எங்கள் குடும்பம் II* | 3 |
| *யோக வாழ்க்கை விளக்கம் V* | 35 |
| *லைப் டிவைன்* | 39 |
| *அன்பர் கடிதம்* | 52 |
| *அன்னையின் ஸ்பர்சம்* | 55 |
| *Half An Hour With The Mother* | 64 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **பகுதி முழுமையை நாடுவது சரணாகதி.**

✡ **தோல்வி மனிதனுக்கு, வேலைக்கில்லை.**

✡ **அடக்கம் அர்ப்பணத்தின் ஆபரணம்.**

✡ **உலகை உள்ளத்தில் காண்பது அகவாழ்வு.**

✡ **பெரியதனுள் சிறியது அடக்கம். சிறியது பெரியதை விலக்கும்.**

## இம்மாதச் செய்தி

# வாழ்க்கை யோகமாவது பெண்ணின் பெருமை.



## எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**பெண் - அடிக்கடி சொல்கிறீர்களே...இந்தப் பெருக்கம் எதிலிருந்து வருகிறது:**

- ✡ இந்தப் பெருக்கம் உண்மையிலேயே ஓர் அட்சயபாத்திரம்.
  - ❀ அதன் அடிப்படை பிரம்மம்.
  - ❀ அந்த நேரம் காரணமானது உழைப்பின் திறமை, ஓர் இடத்தில் செய்த வேலை பலன் தாராதது, போன்றவை.
- ✡ அன்னைக்கு 107°F ஜுரம் பல நாள் இறங்காத போது பகவானுடைய மலை போன்ற சக்தி பலிக்காததற்குக் காரணம், அவருக்கு என்ன வியாதிஎனப் புரியவில்லை என்பதால்.
- ✡ விநாயகருடைய சக்தி 10 ஆண்டுகள் அன்னைக்கு வெள்ளமாகப் பணம் கொடுத்தது. அமெரிக்காவில் வேலையை ஆரம்பித்தவுடன் நின்றுவிட்டது. காரணம் அமெரிக்கர்கட்கு விநாயகர்மீது நம்பிக்கையில்லை.
- ✡ மாணவனுடைய உழைப்புக்குப் பலன் தருவதை நிர்ணயிப்பது அவன் புத்திசாலித்தனம். நிலத்தின் சிறப்பு பலன் தருவது அங்குக் காணும் கவனம், உழைப்பு.
  - ❀ வாழ்வில் பலன்பெற இரண்டு வேண்டும்.
    - ✰ உள்ள இடத்தில் உழைப்பு, திறமை, ஸ்தாபனம் organised personality.
    - ✰ அடிப்படையிலுள்ள அம்சம்.
    - ✰ எலிசபெத்திற்கு டார்சி அமைய நாட்டின் புரட்சிகரமான சூழல் அடிப்படை. அவர்களுடைய உறவில் மற்ற

பெண்களைப்போலில்லாமல் அவள் ஆதாய மனப்பான்மை இன்றி இலட்சிய மனப்போக்குள்ளவளாக இருந்தாள்.

- ✫ அடிப்படையான அம்சம் செயல்பட மனமும் அறிவும் அதை அறிய வேண்டும், நம்ப வேண்டும்.
- ✫ நடைமுறைப் பலன் வர (e.g. hire purchase, Insurance) நாம் செயல்படுமிடத்தில் ஸ்தாபன அமைப்பு வேண்டும்.
- ✫ இந்தியாவின் ஆன்மீகம் வெளிப்படப் பெறுபவருக்கு முழு சத்தியம் தேவை. அடிப்படை ஆன்மீகம் முழுசத்தியத்தால் மடையனை மேதையாக்கவல்லது (உ-ம். காளிதாசன்). அடிப்படை Mental Clarity மூலம் அடிமடையனை மேதையாக்க அடுத்த அம்சம் utter truthfulness of higher consciousnessஆக இருக்க வேண்டும். இந்தியருடைய ஆன்மீக அம்சம் உள்ள இடங்களில் இந்த choiceக்குரிய இரு விஷயங்களிருக்கும். Our own choice decides. நம் செயல் அதை நிர்ணயிக்கும். Low consciousness represents the partial view of the Mind. High Consciousness represents the FULL view of the Supermind. Each will be accompanied by their opposite. Our role lies in knowing the setup, choosing the right side, offering the right complement to the contradiction. The GENIUS in the child can flower through Mental Clarity overcoming the Low Consciousness if the timidity rises to the occasion and offers the right complement to the venom of cruelty.

பெண் - இந்த மாதிரி லைசென்ஸ் எல்லாம் நம்ம மாதிரி-யுள்ளவர்க்கு இல்லை:

- ✡ "நம்ம மாதிரியுள்ளவர்க்கில்லை"என்பது அன்னையின் முத்திரை.
- ✡ அன்னையின் அருள் பெற்று உயர்ந்தவர்களில் பெரும்பாலோர் நமக்கில்லை என்றவர்களே. உயர்ந்தவர் அன்னையிடம் வந்து பெறாமல் போனவர்கள் அதிகம். பெற்றவர் முழுவதும் பெறுவதற்குள் விலகுவர்.



✡ இதன் தத்துவம் என்ன?

- ❀ அன்னைசக்தி மனம் தன்னை சத்தியஜீவியம்என அறிய உதவும்.
- ❀ இது திருவுருமாற்ற சக்தி.
- ❀ திருவுருமாற்றம் வரவேண்டுமானால் இன்று அவர் தாழ்ந்திருக்க வேண்டும். அதுவே சட்டமில்லாவிட்டாலும், அதுவே பொது விதி.
- ❀ தாழ்ந்தவர் 'இதெல்லாம் நமக்கில்லை'என்பார்.
- ❀ தாழ்ந்தவர் உயர தாழ்ந்த நிலையில் உயர்ந்த குணம் ஒன்றிருக்க வேண்டும்.
- ❀ தாழ்ந்த நிலையில் அவ்வுயர்ந்த குணத்தைப் பாராட்ட வேண்டும். Must choose it.
- ❀ Choice எல்லா இடங்களிலும் உண்டு.
- ❀ தொடர்ந்த சரியான choice இருப்பதில்லை. இருக்கக்கூடாது என்பதில்லை.
- ❀ இறைவன் வரும் தருணத்தில் choice சரியாக இருந்தால் பெரிய உயர்வு வரும்.
- ❀ பார்ட்னருக்குக் கணவர் அதுபோன்ற சந்தர்ப்பம்.
- ❀ பார்ட்னருக்கு இக்கம்பனியில்லைஎன்றாலும், கணவரைப் பாராட்டும் நல்ல குணம் அவரிடமிருக்கிறது. அந்த நேரம் அதைப் பாராட்டினார்.
- ❀ இக்குடும்பத்தில் அதுபோன்ற நல்ல சந்தர்ப்பங்களில்லை.
- ❀ தாயாருக்குமட்டும் பெரும்பாலும் அது உண்டு. மற்றவர் தாயாரைப் பாராட்டினால் அந்த அளவுக்கு அது பலிக்கும்.
- ❀ தாழ்ந்தவருக்கு நேரம் வரும்பொழுது தம்மிடம் உள்ள நல்ல குணத்தைப் பாராட்டத் தோன்றினால், அவருக்கு உலகில் உயர்வுண்டு.
- ❀ உயர்ந்தவருக்கு நேரம் வரும்பொழுது தம்மிடம் உள்ள கெட்ட குணத்தைப் பாராட்டினால் அவருக்குள்ளது அனைத்தும் போகும்.
- ❀ கதையைத் தத்துவத்தின்மூலம் அறிவது The Life Divineயை வாழ்வின்மூலம் அறிவதற்கொப்பாகும்.

பார்ட்னர் - “நான் அதிர்ஷ்டக்காரரைத் தேடினேன். நீங்கள் எனக்கு அதிர்ஷ்டம்”என்கிறார். கம்பனி ஏற்பட்டது:

- ✡ அன்னை வரும் அதிசயமான பல வழிகளில் இதுவும் ஒன்று.
- ✡ ஏற்கனவே நாமறிந்த வழிகளில், நம்முடைய திட்டப்படி வரக்கூடாது என்ற சட்டமில்லை. அது விலக்கு, குறைவு.
- ✡ குறி கேட்கும் இடத்தில், I Ching பார்ப்பதில் காசைத் தூக்கிப் போட்டு எப்படி விழுகின்றதுஎனப் பார்ப்பார்கள். Subtle plane சூட்சுமத்தை இப்படி நாடுவதுண்டு. அதிர்ஷ்டம் நம்முள் வர சூட்சுமம் உதவும்.
- ✡ ஓர் ஆட்டத்தில் பந்து goal கோலில் விழ இருகட்சிகளும் ஓடி ஆடுவதில் சூட்சுமம் உற்பத்தியாகிறது. ஆட்டத்திற்குச் சூட்சுமம் இன்றியமையாதது. அதேபோல் அதிர்ஷ்டம் உள்ளே வர சூட்சுமம் பெரிதும் உதவும். அதிர்ஷ்டம் பெற்றவர்கள் "ரோட்டில் கார் ரிப்பேர் செய்ய உதவினேன், கம்பனி டைரக்டர் ஆனேன்'', ''வம்பில் மாட்டிக் கொண்டு தப்ப முயன்றேன். என்னைக் கைது செய்ய முயன்றவர் நண்பரானார்", என்று கதைகள் சொல்வார்கள்.
- ✡ பார்ட்னரை அதிர்ஷ்டம் தேடி வந்ததைப்போல், கணவரையும் அதிர்ஷ்டம் தேடி வந்தது.
- ✡ பெரிய வேலை கிடைத்தது, நல்ல வரன் அமைவது, தற்செயலாகக் காதில் விழுந்த சொல் பிரம்மாண்டமாக வளர்ந்தது வாழ்வில் நிறைய உண்டு.
- ✡ அதிர்ஷ்டம் வர சூட்சுமம் உதவுவதுபோல் அன்னை வரக் காரணலோகம் (Causal world) உதவும். காரணமும் சூட்சுமமும் கலந்திருப்பதால் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம். அன்னை பால்கனித் தரிசனம் தந்தபொழுது, அவ்வழியாக வண்ணான் பிடித்துக்கொண்டு போன கழுதை தலையைத் திருப்பி அன்னையைப் பார்த்ததால், அன்னை அக்கழுதையைக் கொண்டு வரச்சொல்லி, தடவிக் கொடுத்தார். கழுதைக்கு எப்படித் திரும்பி அன்னையைப் பார்க்கத் தோன்றும்? அதில் உள்ள விசேஷம் நமக்குத் தெரியவில்லை. அன்னை அவ்விசேஷத்தை அறிந்து, நாடி, பாராட்டினார். டென்னிஸ் கோர்ட்டிலிருந்து 7 மைல் அன்னை காரில் லேக் எஸ்டேட்டிற்குத் திடீரெனப் போய், வயல்வெளியில் நடந்து போய் அங்கு வந்த கிழவியைப் பார்த்து விசாரித்துப் பூரித்தார். 'அக்கிழவியின் குரல் கேட்டு வந்தேன்'என்றார் அன்னை. இவை சூட்சுமமாகத் தோன்றினாலும், அதைக்கடந்த காரணலோக நிகழ்ச்சிகள் இவை:
  - ❀ அதிர்ஷ்டம் சூட்சுமம்மூலமாக வரும்.
  - ❀ அருள் காரணமூலமாக வரும்.
  - ❀ அன்னை காரணத்திலிருந்து சூட்சுமம்மூலமாக வருவார்.



பார்ட்னர் - மனம் பக்குவப்படுவது எல்லாவற்றையும்விடப் பெரியது:

- ✡ மனம் நம் சிறந்த கருவி.
- ✡ மனம்என்றால் என்னஎன்ற கேள்வியை நாம் இதுவரை எழுப்பியதில்லை.
- ✡ நாம் ஆயிரம் பொருள்களை - மாம்பழம், பேனா, கம்ப்யூட்டர், etc. - அவையென்ன, எப்படி வந்தனஎன யோசிக்காமல் பயன் படுத்துகிறோம். அதில் மனம் ஒன்று.
- ✡ மனம் பக்குவமடையவேண்டும் என்பதையறிய மனம், பக்குவம் இரண்டையும் தெரிந்துகொண்டால் நல்லது.
- ✡ Ripeness, richness, fullness, maturity, saturation, பழுத்தது, முழுமை, நிறைவு, முதிர்ச்சி, செறிவு ஆகியவற்றைக்கடந்தது பக்குவம். Sagacity, wisdom, விவேகம் என்பதும் பக்குவத்தின் அறிவைமட்டும் குறிக்கும். அறிவு, உணர்வு, செயலில் நிதானம் ஆகியவையும் பக்குவமாகா. மனத்திற்கு அறிவுபோல், உணர்ச்சிக்கு கூர்மையுண்டு, செயலுக்குப் பூர்த்தியுண்டு, ஜீவனுக்கு இதுபோல் உள்ள faculty பக்குவம். The endowment of the Being to exist in Joy can be called பக்குவம். ஜீவன் ஆனந்தமாயிருப்பது பக்குவத்தால்.

✡ மனம் நினைவு, ஞாபகம், சிந்தனை, நிதானம், முடிவு, கற்பனை, மௌனம், பாகுபாடு, பகுத்துணர்வது, உற்சாகம், குறிப்பறிதல், ஞானோதயம், சித்திபோன்ற பல திறமைகளையுடையது. (Memory, understanding, thinking, decision, determination, patience, imagination, insight, intuition, experience, discrimination, discretion, suggestion, inspiration, revelation, realisation). இத்தனைத் திறமைகளும் (faculties) சேர்ந்தது மனமாகாது. ஒரு மெஷினின் பகுதிகளைப் பிரித்து ஒரு பெட்டியில் போட்டால் எல்லாப் பகுதிகளுமிருப்பதால் அது மெஷினாகாது. அவை ஒன்றோடொன்று பொருத்தப்பட்டு வேலை செய்தால், அது மெஷினாகும். மனத்தின் இத்தனைத் திறமைகளும் செயலாற்றும்வகையாகப் பொருந்தி நிற்பது மனத்தின் பக்குவமாகும்.

✡ மனமே முழுமனிதனில்லாவிட்டாலும், மனம் பெரியது என்பதால் அதன் பக்குவம் முக்கியம்.

✡ ஆத்மாவும், வளரும்ஆத்மாவும் மனத்தைவிடப் பெரியவை.

✡ உயிரும், உடலும் (in the descent) மனத்தைவிடப் பெரியவை.

✡ ஜீவனே பெரியது, முழுமை பெற்றது. ஜீவனின் சைத்தியப்புருஷனே முடிவானதுஎன்றாலும், மனம் அதன் ஒரு பகுதிஎன்றாலும், இக்குடும்பத்தில் எதுவுமேயில்லைஎன்பதால் மனம் பெரியது, அதன் பக்குவம் அதனினும் பெரியது.

✡ பார்ட்னருக்கு மனப்பக்குவம் உண்டு.

✡ இந்த வீட்டில் இரண்டும் - மனமும், பக்குவமும் - இல்லைஎன அவர் அறிவார்.

✡ அதனால் மனப்பக்குவம் பெரியதாகும்.

கணவர் - உங்களுக்கு மனம். எங்களுக்கெல்லாம் பழக்கம் வரவேண்டும்:

✡ பழக்கம், பக்குவம் என்றால்என்ன? கணவர் இவற்றைப் புரிந்து பயன்படுத்துகிறாரா?

✡ பொதுவாக அறிவில்லாதவரும், படிப்பில்லாதவரும், சொற்களைத் தங்கள் பாணியில் மிகப்பொருத்தமாகப் பயன்படுத்துவார்கள்.



ஏனெனில், சொல் உணர்விலிருந்து எழுகிறது. உணர்வால் தவறமுடியாது.

✡ கணவர் எதற்கும் புண்ணியமில்லாதவர். எந்த உயர்ந்த பழக்கமும் இல்லாதவர். தனக்குப் பழக்கம் போதாதுஎன்பதை அறிவார். அத்துடன் பார்ட்னர் மனப்பக்குவத்தைத் தேடுவதையும் அறிவார்.

✡ பழக்கம்என்பது physical உடலுக்குரியது. புத்தகங்களை அடுக்கி வைப்பது, சாப்பிட்டபின் வாயை நன்றாகக் கொப்பளிப்பது, எழுதியபின் பேனாவை மூடி அதனிடத்தில் அழகாக வைப்பது. அது இந்த வீட்டிலில்லை. எந்த வீட்டிலும் அதில் குறையுள்ளவர் ஒருவரிருப்பார். அப்படி ஒருவரில்லைஎன்றால், அது பெரிய இடம். அங்கு, கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில:

- ❀ பழக்கம் பெரியவர்களால் கற்றுக்கொடுக்கப்படவேண்டும்.
- ❀ கற்றுக்கொடுத்தாலும் கற்றுக்கொள்ளவேண்டும்.
- ❀ கற்றுக்கொண்டாலும் பழக்கம் வரவேண்டும்.
- ❀ பெரியவர் கற்றுக்கொடுப்பது குடும்பம் பழக்கமுடையதுஎன்று தெரியும்.
- ❀ குழந்தை கற்றுக்கொள்வது பரம்பரையில் அப்பழக்கம் உள்ளது என்று தெரிகிறது.
- ❀ கற்றுக்கொள்வது மனதில் பதிவது, முன் ஜன்மத்தில் குழந்தைக்கு அனுபவம் உண்டுஎனத் தெரிகிறது.
- ❀ பழக்கம் உடலுக்குரியது, செயலுக்குரியது.
- ❀ பக்குவத்திற்கு அடிப்படை மனப்பழக்கம்.
- ❀ செயலுக்குரிய பழக்கம்போல், சொல்லுக்குரிய பழக்கம் மனப்பழக்கமாகும்.
- ❀ மனப்பழக்கம் சரியாக இருக்க குடும்பத்தில் படிப்பு வேண்டும்.
- ❀ அது பலதலைமுறைகளிலிருந்தால்தான் மனம் பழக்கத்தை ஏற்கும்.
- ❀ பழக்கம் பண்பை ஏற்றால் பக்குவம் வரும்.
- ❀ ஒரு குடும்பம் முழுவதும் முழுமுயற்சி செய்தால் மனப்பக்குவம் ஒருவர் பெறலாம்.

❀ ஊரே அம்முயற்சியை பயிற்சியாக ஏற்றால் ஒரு குடும்பத்திற்கு மனப்பக்குவம் வரும்.

தாயார் - ...வருவதைப் பெறுபவர் கேலி செய்தபின் வந்ததாக வரலாறில்லை. அது அவருக்கு மட்டுமன்று. அவர் சந்ததிக்கே வாராது:

✡ கேலி என்பது எதிர்ப்பின் வகைகளில் முடிவானது - 1) பாராமுகம் 2) எதிர்ப்பு 3) கேலி - எழுந்தால் எதிர்ப்பு மும்முரமாக இருப்பதாக அர்த்தம். அதனால்தான் அது அவர் சந்ததிக்குமில்லைஎன்பது. ஒருவகையில் அப்படி ரத்தாவதும் அனந்தம். சித்தி ஒருவர் பெற்றால் அவர் சந்ததிகள் அனைவருக்கும் சித்தியின் வித்திருக்கும். அதற்கு முடிவில்லை. அது அனந்தம்.

❀ சித்திக்கும், கேலிக்கும் அந்த அளவில் வித்தியாசமில்லை.

❀ இரண்டும் அனந்தம்.

❀ இராமாவதாரக் கர்மம் கிருஷ்ணாவதாரத்திற்கும் வந்தது.

❀ அதற்கு மாற்று நாமறிந்த ஆன்மீக மரபில், அவதாரப் புருஷனுக்கேயில்லை.

❀ அன்பர்கள் அனைவரும் பலமுறை கண்ட சக்தியிது.

❀ கேலியை மாற்றியது பெரியது, வளர்ந்தது மிகப்பெரியது.

❀ கேலி செய்த மனிதன் (evil force) தீயவன். அவருக்காக வசூல் செய்தது 25 மடங்கு வளர்ந்ததுஎனில் கெட்ட எண்ணம் அதன்மூலம் 25 மடங்கு அதிக ஆன்மீகசக்தியால் அழிந்ததுஎனப் பொருள்.

❀ அந்த நிகழ்ச்சிக்குப்பின் தீயவனுடைய தீயசெயல்கள் எதுவும் பலிக்கவில்லை.

✰ பிறருக்கு அவர் செய்ய முயன்றனவெல்லாம் அவருக்கே நடந்தது.

✰ ஸ்தாபனத்திற்கு வெளியிலிருந்து வருபவரை ஸ்தாபனத்தில் விடாமல் தடுக்க முயன்றது பலிக்கவில்லை. ஸ்தாபனத்தில், நிர்வாகத்தலைமையிலிருந்த அவரை ஸ்தாபனம் வெளி-யேற்றியது. அவர் தன் செயலுக்கு மன்னிப்புக் கோரி உள்ளே வரவேண்டியதாயிற்று.



✰ அன்னை லோகத்தில், அன்பர்கள் வாழ்வில், இனி தீமை செயல்படமுடியாது. முயன்றால் அடி தீமையின்மீது விழும்என்று இந்நிகழ்ச்சி உலகுக்கு அறிவிக்கிறது.

✰ இக்கதையில் அச்சூழலைக் காணலாம். எதிரான சொல், செயலைக்கடந்து காரியம் கூடிவருவதைக் காணலாம்.

✰ கேலி அருளுக்குப் பரமஎதிரி.

அப்படிப்பட்ட மனிதருக்கு அது பலிக்கும்வகையில் செயல்படமுடியும். அதுவும் சொல்லியதுபோல் 25 மடங்கு பலிக்கும்வகையில் செயல்பட தெய்வ சக்தியால் முடியாது. பிரம்மத்தின் அனந்தத்தால்தான் முடியும். அதுவும் நம் அனுபவம். அநேகமாகப் பெரும்பாலான நம் அனுபவங்கள் அதைப்போன்றவையே. அங்கெல்லாம் நாம் காண்பது அனந்தம். எதுவுமில்லாமல் எல்லாவற்றையும் சிருஷ்டிப்பது அது.

✡ தெய்வம் சக்திவாய்ந்தது. அது பிரியப்பட்டால் எதுவும் முடியும். சிருஷ்டியில் தெய்வத்திற்கும் மனிதனுக்கும் தொடர்பில்லை. மனிதனுடைய பிரார்த்தனை தெய்வத்தைத் திருப்தி செய்தால், தெய்வம் செயல்படும். நம்முடைய சொந்த அனுபவத்தில் நாம் கேட்டது, பார்த்ததில் தெய்வம் வேண்டாம் என்பவருக்கு 25 மடங்கு அனுக்கிரஹம் செய்ததாக உண்டா?

✡ அது மனிதன்மூலமாகச் செயல்படுவது அதைவிட முக்கியமில்லையா? அது என்ன சக்தி?

✡ அனந்தம் வாழ்வில் முடிவில்லாத சிறியது boundless finiteஎனச் செயல்படுகிறது.

❀ அனந்தம் சிருஷ்டிக்க அதற்கு எதுவும் தேவையில்லை.

❀ எதுவுமில்லாமலிருப்பதால்தான் அது அனந்தமாகிறது.

❀ எந்தத் திறமையிருந்தாலும், குணமிருந்தாலும் அந்த அளவில் கட்டுப்பாடுண்டு. எதுவுமில்லாவிட்டால் பூரணச்சுதந்திரம் உண்டு. பூரணச்சுதந்திரம் எதையும் சிருஷ்டிக்கும். இங்கு அதையும் தாண்டிய கட்டம். எதிர்ப்பைமீறிச் சாதிக்கவேண்டும். எதிர்ப்பை

மீறி நாம் சாதிப்பது வேறு. எதிர்த்தவருக்கே சாதிப்பது வேறு. எதிர்ப்பைமீறிச் சாதிக்க அனந்தம் எதிர்ப்புக்கு எதிரான திறமையும் பெற்றிருக்கவேண்டும். சாதனையின்போது எதிர்ப்பு எதிர்ப்பை இழந்து சாதிக்க முன்வரவேண்டும். அது திரு-வுருமாற்றம். திருவுருமாற்றம் சரணாகதியால் வருவது. இங்கு திருவுருமாற்றம் வெளியிலிருந்து எதிர்த்தவருக்கு வருகிறது. ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபின், நாடு அராஜகத்தில் மூழ்கியது. வளரவில்லை, மக்கள் வளரவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி வளரவில்லை. எதுவுமே வளரவில்லை. அராஜகம் வளர்ந்தது. அனந்தத்திலிருந்து எழும் சக்தி சாதிப்பதுடன், அராஜகத்தைக் கட்டுப்படுத்தி, சட்டமும், ஒழுங்கும் வளரும்படிச் செய்வதுஎன்பதை நாம் கேள்விப் பட்டதில்லை.

❀ அன்னை சக்தியுள் அதுவும் உண்டுஎன்பதை நம் சொந்த அனுபவங்களை ஆராய்ந்தால் அறியமுடியும்.

❀ நாம் செய்யும் முயற்சி நமக்கு அடுத்தாற்போலுள்ள பழைய எதிரிக்கு 3 நாட்களில் 144 கோடி வியாபாரம் நடத்த உதவுகிறதுஎன்பது ஓர் அன்பர் அனுபவம். அதனுள் இந்தச் சட்டம் செயல்படுவதை நாம் காணலாம்.

கணவர் - அன்னை எல்லா நாடுகளிலும் உள்ளார்என்பதை நாம் ஏற்கவேண்டும் என்றால் வெளிநாடு போய்ப் பார்த்தால்தான் தெரியும் போலிருக்கிறது:

✡ நாட்டின் சூழல்என்பது மலரின் மணம், பழத்தின் வாசனைபோன்றது. மலருக்கு மணமில்லாமலிருக்காது. வாசனையுள்ள பொருளில்லாத இடத்தில் வாசனை வாராது.

✡ அன்பான வீட்டில் பிறந்து வளர்ந்த பெண்ணிற்கு 'இது அன்பான குடும்பம்'எனத் தோன்றாது. அன்பில்லாத குடும்பத்தில் சில நாட்கள் தங்கும்வரை வீட்டில் உள்ள அன்பான சூழ்நிலையின் அருமை புரியாது.



✡ வெளிநாடுகளில் வசதி ஏராளம். ஆனால், மக்கள் அன்பாகப் பழகுவதில்லை. பழகவேமாட்டார்கள். நம் நாடுபோல் ஹாரன் சப்தமோ, மற்ற கூச்சல் இரைச்சலோ இருக்காது. ஊர் சுத்தமாக இருக்கும். ஆனால் வறண்டிருக்கும், வெறிச்சென்று சுடுகாடுபோன்ற உணர்விருக்கும். இந்தியா புண்ய பூமி, அதற்குரிய ஆன்மீகச் சாந்தியின் சூழலிருக்கும். மண்ணில் ஆன்மீகமிருந்தால், சூழலில் அன்பிருக்கும். மெதுவாக, இதமாக வருடிக்கொடுப்பதுபோலிருக்கும். மாத்ரு மந்திரில் வேலைசெய்பவர்கள் வெளியூர் போனால் அந்த வித்தியாசத்தைக் காண்பார்கள். ஓரிரு நாட்கள் தாங்காது. மீண்டும் திரும்பி வந்தபின்தான் போன உயிர் வரும். வெளிநாட்டிலும், நம் நாட்டிலும் இருந்தவர்களுக்கு அது புரியும். ஆன்மா விழிப்பாக இருந்தால் அதிகமாகப் புரியும்.

✡ வெளிநாட்டிற்குப் போனால் அன்னை மறந்துவிடும். நினைவும் வாராது. அங்கும் அன்னையிருக்கிறார்என்று நம்புவது கடினம். வீட்டிலிருந்து ஹாஸ்டலுக்கு வந்த பையன்களில் சிலருக்கு வீடே மறந்துவிடும். விநாயகர் சக்தியே செயல்படாத ஊர் அது. நமக்கு எப்படி நினைவிருக்கும்?

✡ 10, 20 வருஷங்களாக அன்னையை அறிந்தவர் முக்கியமான பிரச்சினை வந்து தவிக்கும்பொழுது, அன்னைக்குப் பிரார்த்தனை செய்தீர்களாஎனக் கேட்டால், 'எனக்கு நினைவே வரவில்லை. நீங்கள் கேட்டபின்தான் நினைவு வருகிறது'என்பது பலர் நிலைமை. மெக்ஸிகோவில் அன்னையிருக்கிறார்என நம்ப நம்பிக்கை அதிகம் வேண்டும்.

✡ விஷயம்என எழுந்தவுடன் அன்னை நினைவு வருவது பெரிய விஷயம்.

✡ நாட்டு மண்ணிற்கு அந்த நாட்டின் ஆன்மீகப் பண்புண்டு. ஐரோப்பாவில் தவம் செய்பவரில்லை. அந்த மண்ணுக்கு தவத்தின் சிறப்பில்லை. வசதி, சுத்தமிருக்கும். மண்ணிலில்லாத மணம் சூழலிலிருக்காது. சூட்சுமமானவர் அதுபோன்ற நாடுகட்குப் போனால் மூச்சுவிடவும் திணறுவார்கள். சூழல் ஆன்மீக சொத்து.

✡ நினைவு என்றால்என்ன? அன்னை நினைவு, ஆத்மாவின் நினைவு என்றால்என்ன?

✡ நேற்று, சென்ற ஆண்டு, சிறுவயதில் நடந்தவை மனத்தின் அடித்தளத்திலிருந்து இப்பொழுது மேலே வருவது நினைவு எனப்படும். Surface memory. இது மேலெழுந்த நினைவு.

✡ பூர்வஜென்மத்தில் நடந்தவை ஜீவனில் கரைந்துவிடும். ஏதோ காரணத்தால் ஒரு பகுதி கரையாமல் ஒட்டிக்கொண்டிருந்தால் இப்பொழுது தெரிவது பூர்வஜென்ம நினைவு. இது சைத்தியப் புருஷனுடைய நினைவு.

✡ மனிதன் பிறந்ததிலிருந்து இன்றுவரை நிகழ்ந்தவை நம் ஆழ்மனத்துள் உள்ளன. அவை கனவில் நேராகவும், தலைகீழாகவும், விபரீதமாகவும் எழும். அது ஆழ்மனநினைவு. Subconscious memory.

✡ மேல்மனம், உள்மனம், இரண்டையும்கடந்தது அடிமனம். அது பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது. அகந்தை அழிந்தபின் வெளிவரக்கூடியது. சூட்சுமமானது. அதற்கு உலகில் எங்கு நடப்பதும் தெரியும். அடிமன நினைவுஎனலாம். Subliminal memory.

✡ உலகில் அனைவரும் ஆர்வமாகக் கருதுவது, சமூகத்தில் எவருக்கும் நினைவிருக்கும். அதைச் சமூகத்தின் நினைவு Collective social memory எனலாம்.

✡ ஏற்கனவே முன்ஜென்மங்களில் அன்னையை அறிந்தவருக்குத் தம்மையறியாமல் அவர் நினைவு எழும். அது ஆத்மா அன்னையை நினைவுகூர்வதாகும்.

✡ அன்னைஎன்ற தத்துவம் நாமறிந்ததுஎன்றாலும், அன்னையின் அவதாரம் உலகுக்குப் புதியது; புதியது எதிரேயிருந்தாலும் நினைவு வாராது. ஏனெனில் நினைவு உள்ளிருந்து எழுவது.

✡ வேதம், உபநிஷதம், தத்துவம் பயின்றவர் அன்னையை அவர்களை அறியாமல் நாடி வருவதுண்டு. அப்படி வந்தாலும் அவர்கட்கு அன்னை நினைவு எளிதில் வாராது. அவர்கள் படித்ததே நினைவு வரும். பூர்வஜென்மத் தொடர்பில்லாமல் அன்னை நினைவு சுலபத்தில் உள்ளிருந்து எழாது.

✡ புதியதாக அன்னையை அறிந்தவர் எளிதில் அன்னையை மறந்துவிடுவார். அவர் நாமஜெபம், அன்னையை ஆழ்ந்து போற்றுவது, இடைவிடாமல் நினைக்க முயல்வது, ஆகியவை உள்ளே அன்னைக்குரிய இடத்தைத் தொடும்வரை நினைவு ஏற்படாது.



அப்படித் தொட்டபின் அன்னை நினைவு அங்கிருந்து எழும். நாம் அன்னையை ஏற்பது பவித்திரமானால், அன்னை நம்மை ஏற்பார். அவர் நம்மை ஏற்றால், உள்ளே நினைவுக்குரிய இடம் ஏற்படும்.

✡ அன்னை வாழ்ந்த இடம், அன்னையை வணங்கும் இடம், அன்னையை அறிந்தவர் உள்ள இடங்களுக்குப் போனால், அவ்விடத்திலுள்ள சூழல் நமக்கு நினைவாக எழும்.

✡ அன்னையைத் தரிசனம் செய்த நாட்கள், அந்த நேரங்கள், இடங்கள், அவற்றோடு தொடர்புள்ள பொருள்கள், நபர்கள் அன்னையை நினைவூட்டுவார்கள்.

✡ அன்னையைப் பற்றிக் கேள்விப்படுவது பாக்கியம். அன்னையை அறிவது அதிர்ஷ்டம்.

அன்னை நினைவு வருவது நாம் அவர்க்கு உரியவர்என்று பொருள்.

✡ அன்னை நினைவு மனத்திற்கோ, உணர்விற்கோ இல்லை, ஆத்மாவுக்கேயுண்டு. அதுவும் வளரும்ஆத்மாவுக்கே அந்நினைவுண்டு. அதனால்,

நினைவே வழிபாடு, நெஞ்சே ஆலயம்என நாம் கூறுகிறோம்.

தாயார் - பிள்ளைவீட்டார் தாமே முன்வந்து பெண்வீட்டாரை அணுகி வரன் பேசுவதோ, எல்லாச் செலவுகளையும் தாமே ஏற்பதாகச் சொல்வதோ, நாம் அறியாதது:

✡ இது கேள்விப்படாதது. திருவுருமாற்றம் தேடுபவர்கள் செய்வது.

✡ இதைத் தொடர்ந்து செய்தால் சமூகத் திருவுருமாற்றம், மனத்தின் திருவுருமாற்றமாகி, ஆத்மாவின் திருவுருமாற்றத்தில் முடியும்.

✡ இதன் பலன் பெறுபவர் அன்னையை அதிகமாக நாடியதால் திருவுருமாற்றத்தின் பலன் அவர்கட்கு வருகிறது. தாங்களும் திருவுருமாற்றத்தை ஏற்கவேண்டும்என்று பொருள்.

✡ அன்னையை அறிவது பாக்கியம் என்றோம்.

  ❀ அன்னை அன்பருடன் தொடர்பு அதைவிடச் சிறந்தது.

  ❀ அன்பருடன் உறவு அதற்கடுத்தது.

- ❀ உறவில் திருவுருமாற்றப் பலன் தெரிவது, நமக்குத் திருவுருமாற்ற நேரம் வந்ததை அறிவிக்கும்.
- ❀ சுமுகம் அதன் அடிப்படை.
- ❀ சுமுகத்திற்குப் பதில் பிணக்கு எழுவது பழைய தரித்திரத்தை வற்புறுத்துவதாகும்.
- ❀ எவருக்கும் நடக்காதது நமக்கு நடந்தால், எதிர்காலத்தில் எவரும் பெறாததை நாம் பெறலாம்எனக் காட்டுகிறது. (உ-ம். Software employee நாராயண மூர்த்தியாகலாம்).
- ❀ அது நடைபெற நாம் எவரும் செய்யாததை - திருவுருமாற்றத்தை - விரும்பி ஏற்கவேண்டும்.
- ❀ அன்னை, அன்பரை எத்தனைக் கட்டங்கள் உயர்த்துவார் என்பதை அறிவதும் ஒரு ஞானம்.
- ❀ ஒவ்வொரு கட்டத்தையும் கடக்க நாம் என்ன செய்யவேண்டும் என்பது யோகம்.
- ❀ வாழ்வில் அதை அறிவது அதிர்ஷ்டம்.
- ❀ நமக்கு (particular personal) குறிப்பாக எந்த இடத்தில் எப்படிச் செயல்படக்கூடாது, எப்படிச் செயல்படவேண்டும்என்று தெரிவது choice தெரிவதாகும்.
- ❀ Choice தெரிவது அன்னையை வாழ்வில் அறிவதாகும்.
- ❀ Choice இரண்டல்ல, ஆயிரம்.
- ❀ Choice சமர்ப்பணத்திற்குரியது, நமக்கன்று.
- ❀ Choiceஇல் உலகம் அடங்கியுள்ளது.

✡ இந்த வீட்டில் எந்தப் பிள்ளைக்கும், கணவருக்கும் அன்னை நினைவே வாராதது கவனிக்கத்தக்கது.

தாயார் - மார்க்கட்டைப் போட்டி மனப்பான்மையுடன் நினைக்கக் கூடாது:

✡ போட்டியை அழித்தால் வளரலாம்என்பது மார்க்கட் சட்டம்.



போட்டியை வளர்த்தால் வளரலாம்என்பது அன்னைச் சட்டம். மார்க்கட் வளரும்பொழுது, போட்டி வளர்வதை நாம் காண்கிறோம். போட்டி வளர்வதால் மார்க்கட் வளர்கிறதுஎன நாம் அறிவதில்லை.

✡ இக்கதையில் கம்பனிக்குப் பின்னணியாய் நிற்பவர் மனத்தில் போட்டியில்லாததால், கம்பனி தானே பல மடங்கு வளர்கிறது. அதற்கு முக்கியக் காரணம் போட்டி மனப்பான்மையில்லாததால்.

✡ போட்டி - வளர்ச்சி தத்துவம்என்ன?

மார்க்கட் வளரும்பொழுது, அதன் பெரும்பயன் பெற போட்டி வளர்வதைக் காண்கிறோம். போட்டியால் முக்கியமாக விலை குறைகிறது. விலை குறைவதால் திறமை வளர்கிறது. திறமையை நாமே வளர்த்துக்கொண்டால் மார்க்கட் வளரும்என்பது பொருளாதாரம் அறியும் தத்துவம்என்றாலும், பொதுவாக மக்கள் மனத்திலில்லாதது.

மார்க்கட்என நாம் கூறுவது சரக்கை உற்பத்திசெய்யும் திறமை.

புதிய புதிய சரக்கு வரும்பொழுது அதற்கு மார்க்கட் உற்பத்தியானபடி இருக்கிறது.

மார்க்கட்என குறிப்பிட்ட அளவுண்டு. அதை அனைவரும் பகிர்ந்து கொள்ளவேண்டும்என்று போட்டி மனப்பான்மை கூறுகிறது.

திறமையாக நல்ல சரக்கை உற்பத்திசெய்தால் அதற்குரிய மார்க்கட் எழுகிறதுஎன்பது அனுபவம். மார்க்கட் அளவுகடந்தது. அதை நாமே உற்பத்திசெய்கிறோம். அது திறமையால் உற்பத்தியாகிறது. பண்பு, நாணயத்தால் அளவில்லாமல் உற்பத்தியாகிறதுஎன்பதை எளிதில் ஏற்க முடிவதில்லை. இக்குடும்பத்தின் அனுபவத்தில் கம்பனி வந்தது, பெருகியது, மேலும் விரிவடைவது அதை நிரூபிக்கிறது.

✡ மனிதன் வளரச் சந்தர்ப்பம் வேண்டும், உதவி வேண்டும், சிபாரிசு வேண்டும்என்பது பொதுவான மனப்பான்மை.

மனிதன் வளர முயற்சி வேண்டும், ஆர்வம் வேண்டும், திறமை வேண்டும் என்பது தத்துவம். முயற்சி, ஆர்வம், திறமை உள்ளவர்க்கு முடிவில்லாத சந்தர்ப்பம் உண்டுஎன்பது USAஇல் 300 ஆண்டு அனுபவம். 1980 முதல் அது இந்தியருடைய அனுபவம்.

✡ இக்கதையில் தாயாருக்குச் சந்தர்ப்பம், உதவி, சிபார்சு, ஆகியவை எல்லாம் அன்னை.

அன்னை இம்மூன்றையும் சேர்த்துள்ளார்.

தாயாருடைய பக்தி, குடும்பத்தை 3-ஆம் நிலையிலிருந்து 8-ஆம் நிலைக்கும், 15-ஆம் நிலைக்கும் கொண்டுவந்தது. எந்தச் சந்தர்ப்பமோ, எவருடைய சிபாரிசோ, உதவியோயில்லை. மேலும் 80-ஆம் நிலைக்கு வந்ததும் எதுவுமில்லாமல் வந்ததே.

- ❀ சந்தர்ப்பம் அன்னையை அறிவது.
- ❀ உதவி அன்னைக்கு உண்மையாக இருப்பது.
- ❀ தானே அன்னை நினைவு வருவது சிபாரிசு.

✡ போட்டி negative, ஒத்துழைப்பு positive.

போட்டிப்போட நினைக்காவிட்டால் அன்னை ஒத்துழைப்பார்.

போட்டி, தவறுஎனக்கொண்டால், அன்னை அனைவர்மூலமும் ஒத்துழைப்பார்.

போட்டியைவிடப் பெரிய தவறு பொறாமை.

பொறாமையுள்ளவர் முன்னுக்குவர எவர்மீது பொறமையிருக்கிறதோ அவருக்குச் சேவை செய்யவேண்டும்.

தாயார் - அது பெரிய விஷயம். அதிர்ஷ்டம் வருவதை நாம் அவசியம் மறுக்கவேண்டும்என்பது மனித நியாயம்;
பார்ட்னர் - இது நான் கேள்விப்படாததாக இருக்கிறதே:

✡ கதையில் மறுத்தவர்களுக்கு உதாரணம் கூறுகிறேன்.

✡ ரிஸ்க் இருக்கிறதுஎன முதலில் மறுத்தவன், அனைவரும் ஏற்றபின், "இந்த ஊரில் போர் போடாமல் இனி வாழ்வதில்லை. எல்லா நிலமும் போனாலும் சரி"என்பான்.

✡ முதலில் ரிஸ்க்எடுக்க தைரியமில்லை. இப்பொழுது தைரியம் வந்துவிட்டது.

✡ அதிர்ஷ்டமாக இருந்தாலும் ஏற்க தைரியம் வரவேண்டும்.



✡ தைரியம் எப்படி வருகிறது?

✡ வரும் அதிர்ஷ்டத்தின்மீதுள்ள பிரியத்தால் தைரியம் வருகிறது.

✡ எப்பொழுது பிரியம் வரவில்லை?

✡ உள்ளதை இரசிக்கும்பொழுது வருவதை ஏற்க தைரியமில்லை.

✡ பகவான் அதை Taste of Ignorance அறியாமையின் ருசிஎன்கிறார்.

✡ மேலும் சொல்லக்கூடியதுண்டா?

✡ சமூகம் ஏற்பதை எதிர்பார்க்கிறான்என்றால் individuality சொந்தமாக அறிவு வரவில்லைஎனப் பொருள்.

✡ இருப்பதை இரசிப்பது அதிகமானால், வருவது கண்ணுக்குத் தெரியாது.

✡ மீதியெல்லாம் நாம் கூறும் காரணங்கள், சாக்குஎன்றால் பொருத்தமாக இருக்கும்.

✡ வேண்டாம்என்று முடிவை எடுத்துவிட்டால், அதற்குக் காரணம் கூறுவது அவனவனுடைய பர்சனாலிட்டியைப்பொருத்தது. அது ஏராளம்.

- ❀ அந்த நேரம் எழும் பிரச்சினையை முக்கியமாகக் கருதிப் பேசுவார்கள்.
- ❀ வேண்டும்என்றால் அதே பிரச்சினையை ஒதுக்கிப் பேசுவார்கள்.
- ❀ அந்த நேரம் மனிதன் 60 வயதானாலும் அடுத்தவர் பேச்சைக் கேட்பான். அப்படி அதிகமாகக் கேட்பது,
  - ✰ தகப்பனார் பேச்சு.
  - ✰ அதைவிட அதிகமாகக் கேட்பது தாயார்.
  - ✰ மனைவி பேச்சு தாயாரைக்கடந்து எழும் நேரமும், தாயார் பேச்சு மனைவியைக்கடந்து செல்லும் நேரமும் உண்டு.
  - ✰ மனிதனுக்குப் பெற்றோர் முக்கியம்.
  - ✰ யாரோ ஒரு சிலர் குழந்தைகள் பேச்சை அப்படியே எடுத்துக் கொள்வார்கள்.
  - ✰ யார் பேச்சைக் கேட்டாலும், அது தான் எடுத்த முடிவாக இருக்கும்.

☆ அதிர்ஷ்டத்தை மறுக்கக்கூடாதுஎன்று ஒப்புக்கு ஏற்றுக் கொண்டாலும், அந்த அளவுக்கு பலிக்கும்.

☆ அதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டம்என அறிவது அதிர்ஷ்டம்.

☆ அன்னை தருவது அருள், பேரருள்.

☆ நம்பிக்கையால் பெறுவது அருள். தன்னம்பிக்கை போனபின் வருவது பேரருள்.

கணவர் - நாம் rivals போட்டிபோடுபவனை நம் முழுமையான பகுதியாக ஏற்றால் வாய்ப்பு வரும்என்கிறோம். மறுப்பதே மனித சுபாவம்... "நீ சொல்லி நான் செய்தால் என்ன மரியாதை"என ஒருவர் 85,000 ரூபாய் வருமானத்தை மறுக்கிறார்என்றால் அதற்கு மேலும் என்ன விளக்கம் தேவைப்படுகிறது?

✡ இதனுள் Social evolution சமூக வளர்ச்சிக்குரிய தத்துவங்கள் பல உண்டு.

✡ வாய்ப்பு பெரியதிலிருந்து வருகிறது. நாம் சுயநலமாக நம்முடனே இருந்தால் சுருங்குகிறோம், பலரையும் சேர்த்துக்கொண்டால் பெரியதாகிறோம். அது வாய்ப்புவர உதவும், பலரையும் அவர் மதிப்பை அறிந்து ஏற்றுக்கொண்டால் பெரும்வாய்ப்புகள் வரும். சத்திய ஜீவியத்தில் அகந்தையில்லாததால், அனைத்து ஜீவன்களும் ஒன்றில், அனைத்தும் சுமுகமாக இருக்கின்றன. போட்டிபோடுபவனை நம்மில் பகுதியாக ஏற்றால் நாம் சத்தியஜீவியசக்தியை நம்முள் கொண்டுவருகிறோம்.

✡ சமூகம்என்பது authority, power அதிகாரத்தால் ஏற்பட்டது. அதிகாரமில்லாவிட்டால் சமூகமில்லை. அதிகாரம் முக்கியம். சமூகமே அதிகாரம்என்பதால், அதிகாரத்தில் உள்ளவனுக்கு அறிவு இருக்கும்என நம்புகிறோம். இது மூடநம்பிக்கைஎன்றாலும் பரவலான நம்பிக்கை. அது தலைகீழே மாறி கீழே வேலை செய்பவனுக்கு அறிவிருக்காதுஎன்னும் நம்பிக்கை.



✡ அத்துடன் எதிரி ஒருவன் சொல்வது நல்லதாக இருந்தாலும், அதனால் முடிவில் நமக்கு நல்லது வாராதுஎன்பது அனுபவம். அதனால்,

❀ எதிரிக்கு நம் விஷயத்தில் இராசியில்லைஎன்று நம்புகிறோம்.

அது கீழே வேலைசெய்பவனுக்கும் பொருந்தும்என்பது பலர் எண்ணம்.

❀ கீழே வேலைசெய்பவனுக்கு இராசியிருக்காதுஎன்று நம்புகிறோம்.

❀ நாம் கீழே வேலைசெய்பவனை மட்டமாக நினைப்பதே தடையென நமக்குப்படுவதில்லை.

✡ அதிகாரம் என்பது வலிமை. வலிமை முக்கியம்என்று மனிதன் கருதியதால் கொள்ளைக்காரன் ஆதிநாளில் இராஜாவானான்.

❀ பிரம்மம்என்பது சத். சத்தென்பதே ஜடமாயிற்று. ஜடம்என்பது பொருள், நிலம், சொத்து. சொத்துடையவன் தலைவன்என்ற பரம்பரை *பிரம்மம் நமது தலைவன்என்ற அடிப்படையில் ஏற்பட்டது.*

❀ மனிதன் பிரம்மத்தை ஏற்பதை வலிமையானவன் தலைமையை ஏற்பதால் வெளிப்படுத்துகிறான்.

✡ அன்னையை அறிவது அதிர்ஷ்டம். அன்னை தம்மை எதிர்ப்பவர்க்கும் தம்மை அறிமுகப்படுத்துகிறார். எந்த கயமையுள்ளும் ஒளி சிறிது இருக்கும். கெட்டகாரியங்கள்மூலமாகவும் அவ்வொளி சிறு நல்ல காரியங்களைச் செய்யும். நல்லஊழியனை வேலையிலிருந்து எடுப்பது துரோகம் என்றாலும், அவ்வூழியனுக்கு இந்தச் சமூகத்தில் பொறாமையை அறியாமல் வாழமுடியாதுஎன்ற அறிவுதர அந்த வேலைநீக்கம் பயன்படுவதால், அதுவும் அன்னைக்குச் செய்யும் சேவை. அந்தச் சேவைக்குப் பலனாக அன்னை அதே ஊழியன்மூலம் 85,000 ரூபாய் வருஷவருமானத்தைத் தருகிறார். தாம் செய்த பாவத்தின்மூலமாகவும் இறைவன் செயல்படுகிறான்என்ற அருளை ஏற்கமுடியாதது மனித நிலை.

❀ 25 ஆண்டுகளில் அவர் பெற்ற நன்கொடை ரூ.2,350/-, ஆண்டிற்கு 100 ரூபாய்.

❀ 85,000 ரூபாய் வருமானம் வரும் முயற்சியில் அனுபவம் இல்லாதவர் தயங்கலாம். இவருக்குச் சொந்த அனுபவம் உண்டு.

அந்த அனுபவத்தால் அம்முயற்சிக்குச் செலவில்லை. இந்த வருமானமுள்ள இடங்களில் முதல் ஆபத்து திருடு. இவருக்கு அதுவும் இல்லை. 4 ஆண்டுகட்குப்பின் பெரும்வருமானம் வரும் என்பது இவருக்குப் புரிகிறது. நம்புகிறார்.

- ✰ ஆனால் மறுக்கிறார்.
- ✰ மறுப்பது தரித்திரம்.
- ✰ தரித்திரத்தை வற்புறுத்த அவர் சொல்லும் காரணம், 'நீ சொல்லி நான் செய்யமாட்டேன்'என்பது.

பார்ட்னர் - நாம் வாழ்க்கையைச் சுருக்கிக் கொள்கிறோம். அதிகமாகவும் சுருக்கிக்கொள்கிறோம். வருவது அந்தச் சுருக்கத்தின் மூலம் வரவேண்டும்என்கிறோம். இந்த மனப்பான்மை புரிகிறது.

உலகில் எதுவும், யாரையும் தேடி வருவதில்லை. தரித்திரம்தான் தேடி வரும்:

- ✡ தெய்வலோகம் (overmind) சத்தியஜீவியத்திற்கு உலகில் பிரதிநிதி.
- ✡ சத்தியஜீவியம் அனந்தம் (infinite). தெய்வலோகம் அதைக் கண்டமாக்குகிறது finite.
- ✡ கண்டமான நிலையில் (unique) ஒவ்வொன்றும் தனித்திருக்கும். கைவிரல் ரேகை ஒருவர்போல ஒருவருக்கிருக்காது, மரஇலைகள் ஒவ்வொன்றும் வேறாக இருக்கும். இத்தனித்தன்மையில் (uniqueness) சிருஷ்டி முடிகிறது. அதன்பிறகு பரிணாமம் எழுகிறது. அதைச்செய்வது சைத்தியப்புருஷன். நாம் வியாபாரத்தை ஆரம்பித்தால், அதிலிருந்து பிரிந்து மளிகைக்குப் போகிறோம். அதிலும் ஒரு விஷயத்தை - பருப்பு அல்லது அரிசி - முக்கியமாகக் கவனிக்கின்றோம். நல்லபருப்புக்கு நம் கடை பேர்போனதாகிறது. கையில் முதல் சேர்கிறது. நகை வியாபாரத்தில் அதிகலாபம் வரும்என்றால், ''எனக்குப் பருப்பு வியாபாரத்தை விடமுடியாது'' என்கிறோம். முதல் சேர்ந்தபின் பெரிய வியாபாரத்திற்குப்போக நூற்றில் ஒரிருவரும் முன்வரமாட்டார்கள். தொழிலை வியாபாரம் ஆக்கி, அதை மளிகையாக்கி, அதுவும் பருப்பு வியாபாரம்என சுருங்குவதால் பிரபலமாகி முதல் சேர்கிறது. முதல் சேர்ந்தபின் எந்த வியாபாரத்திற்கும் போகலாம். பொதுவாக அப்படிப் போவதில்லை. இக்குடும்பம் சிறுகுடும்பமாக இருந்து தகப்பனார் போலவே பிள்ளையும் இருக்கவேண்டும்என வற்புறுத்தியிருந்தால், B.E. படித்திருக்கமாட்டான். இந்த வாய்ப்புகள் வந்திருக்காது. எதுவுமில்லாத பொழுது மனிதன் எதையும் பற்றிக்கொள்வான். கொஞ்சம் வசதி சேர்ந்தபின் அதை ரிஸ்க் செய்யமாட்டான். ரிஸ்க் எடுக்காதவனுக்கு வாய்ப்பில்லை.
- ✡ இந்தக் குடும்பம் தன் தரித்திரமான குணங்களைவிட்டு அன்னைக்கு உரிய நல்லகுணங்களை ஏற்பது ரிஸ்க்என நினைத்து ஒதுங்குகிறது. அதுவே அவர்கட்குத் தெரியாது.
- ✡ சிருஷ்டி எந்தக் கட்டத்திலும் பரிணாமமாகலாம் - சைத்தியப்புருஷன் மூலமாக. முதல் சேர்ந்தபின் எந்த வியாபாரத்திற்கும் போகலாம் என்பது போன்றது அது.
- ✡ அன்னைவாழ்வுஎன்பது நாம் நாடிப்போவது நம்மைத் தேடிவருவதாகும்.
- ✡ உள்ளதுதான் தேடிவரும்.
- ✡ நம் உலகிலுள்ளவை பிரச்சினை, கஷ்டம், தரித்திரம், தொந்தரவு தான். நம்மைத் தேடிவரவேண்டும்என்றால் இவைதான் தேடிவரும்.
- ✡ நம் உலகில் நல்லதில்லை, வாய்ப்பில்லை நம்மைத் தேடிவர.
- ✡ அன்னைஉலகை நாம் அடைந்தால், அங்கு நல்லதுமட்டுமிருக்கும். நம்மை நல்லதுமட்டும் தேடிவரும்.
- ✡ இந்தக் குடும்பத்திற்கு வந்த வாய்ப்புகள் பிரம்மாண்டமானவை. இந்த அளவு வாய்ப்பு வாராத அன்பர் குடும்பமில்லைஎன்றால் நம்புவது கஷ்டம்.
- ✡ எல்லா அன்பர்கட்கும் இந்த அளவு வாய்ப்புவந்தாலும், தானுள்ள இடத்தை மாற்றாமல், 'எனக்கு வருவதானால் என் தொழிலில் வரட்டும்' என்பது தரித்திரத்தை வலியுறுத்துவதாகும்.
- ✡ வாராததேயில்லை. மனிதன் மறுக்காததுமில்லை.

பார்ட்னர் - அதிர்ஷ்டம் வரும் ரூபத்தில் நாம் ஏற்பதே அதிர்ஷ்டம். அதிர்ஷ்டத்தை நமக்குரிய ரூபத்தில் வரச்சொல்வது தரித்திரம்:

- ✡ காலம் மாறும்பொழுது மனிதன் அதற்கேற்ப மாறிக்கொள்ளவேண்டும்.
- ✡ நிகழ்காலத்தைக் கடந்தகாலத்திற்கு உட்படுத்த முயல்வது சிருஷ்டியின் போக்கை மாற்றமுயல்வது. இதைத் தமிழில் தரித்திரம் என்பர்.
- ✡ தரித்திரம்என்ற சொல் வறுமையைக் குறிக்கும்.
- ✡ வறுமைக்குரிய மனப்போக்கைஎல்லாம் குறிப்பிடும் சொல் தரித்திரம்.
- ✡ அறியாமையை அறிவுக்கு எதிரானதுஎன்கிறோம். அறிவைப் பயன் படுத்தி அறியாமையின் உயர்வை நிலைநிறுத்துவது தரித்திரம்.
- ✡ Reactionary, conservatism, anachronism, superstition ஆகிய அனைத்தையும் சேர்த்துக் குறிப்பிடும் செறிவானசொல் தரித்திரம் என்பது. பிற்போக்கு, பழைய பஞ்சாங்கம், காலத்திற்கு ஒவ்வாதது, மூடநம்பிக்கை ஆகியவை தரித்திரத்தின் பகுதிகள்.
- ✡ Luckஎன்பதற்கு எதிராக misfortuneஎனலாம். அதை அதிர்ஷ்டம், தரித்திரம்எனக் கூறலாம்.
- ✡ Luckஎன்ற சொல் அதிர்ஷ்டத்தின் எல்லா அம்சங்களையும் தொகுத்துக் கூறும். Misfortuneஎன்பது தரித்திரத்தின் ஒரு பகுதியைமட்டும் கூறும்.
- ✡ நாடு முன்னேறுகிறது. இனி கிராம வாழ்வில் சிறப்பில்லை. திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு வேலையில்லை. கூழ்குடித்தவன் குண்டன், சோறு தின்பவன் சொத்தைஎன்பது செல்லாது. ஷர்ட் போடாத நாகரீகம் எடுபடாது. குடுமிக்குக் காலமில்லை. செய்தியை ஆளிடம் சொல்லியனுப்பும் காலம் மாறிவிட்டது. நகரவாழ்வு நாகரீகமானது. உலகைப்பற்றி அறியும் படிப்பு அவசியம். காலையில் எழுந்து டிபன் சாப்பிட்டு, ஷர்ட் பேண்ட் உடுத்து, முடியை கிராப் செய்து, செய்தியைப் போன்மூலம் பேசும் இந்த நாளில், முந்தைய பழக்கங்களை இலட்சியம்என வற்புறுத்தும் மனப்பான்மை தரித்திரம். உலகம் மாறும்பொழுது நாமும் மாறவேண்டும். நம் மனப்போக்குக்கு



ஏற்றவாறு உலகம் மாறவேண்டும்என்பது பிற்போக்கான தரித்திரமான மனப்பான்மை.

- ✡ மரியாதை பணத்திலிருந்து மனிதனுக்கு வருகிறது.

அதிகாரத்திலிருந்து அடக்கத்திற்கு மாறுகிறது.

ஆணின் உயர்வு மாறி ஆணும் பெண்ணும் சமம் என்றாகிறது.

விஷயங்களை நினைவிலிருத்துவதற்குப்பதிலாக ரிக்கார்டில் பதிக்கிறோம்.

சிறுவர்கள் படித்துவிட்டால் அவர்கள் படிப்பை ஏற்கிறோம்.

தாழ்ந்தவன் திறமை பெற்றால், அவன் திறமையை ஏற்கிறோம்.

வெளிநாடு சென்றால் ஜாதிப்பிரஷ்டம் செய்வதற்குப்பதிலாகப் போற்றுகிறோம்.

ஆங்கிலத்தை நீசபாஷைஎன்று கூறாமல் உலகமொழிஎன ஏற்கிறோம்.

சம்பிரதாயத்தைப் போற்றிப்புகழாமல், மூடநம்பிக்கை என்கிறோம்.

சோப்புப் போட்டு குளிப்பது அனாசாரம்என்று கூறாமல், சோப்புப் போடாமல் குளிப்பது அழுக்குப்போகாதுஎன்று சோப்பை ஏற்கிறோம்.

குழந்தை வேகமாகக் கற்றால் மண்டை வெடித்துவிடும்என்பது அறியாமைஎன்று தெரிகிறது.

பெரியம்மை வந்தால் மாரிஅம்மனுக்குப் பிரார்த்தனை செய்வது மாறி தடுப்பூஊசி போட்டுப் பெரியம்மையைத் தடுக்கிறோம்.

விஷயம் மாறுவதில் இல்லை.

அறியாமை அறிவாக மாறும்பொழுது மாறுவது விஷயம்.

*அறியாமையை அறிவுஎனப் பேசும் அறிவு தரித்திரமான மனப்பான்மை.*

விஷயம் மனப்பான்மையிலிருக்கிறது.

கடந்தகாலம் வரப்போவதில்லை.

நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கடந்தகாலத்திற்கு உட்படுத்த முயலும் அறிவு தரித்திரம்எனப்படும்.

கணவர் - நாங்களெல்லாம் என்ன செய்யக்கூடாது, என்ன செய்யவேண்டும்எனச் சொல்;

பார்ட்னர் - அப்படிக் கேட்கக்கூடாதுஎன்று கூறுகிறாரே?

✡ அதிகாரிக்குக் கீழே வேலை செய்பவன் சொல்வதைச் சொல்வதுபோல் செய்யவேண்டும். இந்த தபாலைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வா என்றால், அதை மகனிடம் கொடுத்தனுப்பக்கூடாது; குற்றமாகும்.

✡ அதிகாரி தான் என்ன செய்யவேண்டும்என அடுத்தவரைக் கேட்டால், அவர் அதிகாரியாக இருக்க இலாயக்கற்றவர்.

✡ இதிலுள்ள தத்துவம் என்ன?

சிருஷ்டி தன்னிச்சையாக (Self-conception) ஏற்பட்டது.

தன்னிச்சையாக ஏற்பட்டிருக்காவிட்டால், அது சிருஷ்டியாக இருக்காது, மனிதன் பிரம்மம்.

அவன் செய்வனவற்றை தானே அறிந்து, புரிந்து, உணர்ந்து செய்ய வேண்டும். தானே செயல்படமுடியாதவன், பிறர் கீழே வேலைசெய்ய வேண்டியவன்.

அவனுக்குச் சொந்தமாக எதுவும் கிடையாது.

மனிதன் மலர்வது மனிதனில் பிரம்மம் மலர்வது.

தன்னிச்சையாக செயல்பட்டால்மட்டுமே அது முடியும்.

அப்படியானால் அன்னை கூறியதை எப்படி எடுத்துக்கொள்வது?

அன்னை கூறியதைப் புரியாமல் எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக, நன்றாகப் புரிந்தபின், புரிந்ததற்காக எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக, அன்னை கூறியதற்காக எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த யோகத்தில் மனிதகுரு இல்லை.

உள்ளுறை ஜகத்குருவே குரு.

அந்த ஜகத்குரு சொல்வதும், அன்னை சொல்வதும் ஒன்றாக இருக்கும்.

✡ ஆரம்பத்தில் சொல்லலாம், சொல்லிக்கொடுக்கலாம்.



கேட்டுச் செய்பவருக்குப் பெரும்பலனிருக்கும்.

பெறும் பலனுக்கு அகந்தை அடங்கவேண்டும்.

அகந்தை பலனைத் தனக்கு எடுத்துக்கொள்ளும்.

அந்தக் கட்டத்தில் மேலும் யோசனை சொல்லமுடியாது, சொல்லக் கூடாது.

'சொல்லுங்கள்'என்பவர் அந்தக் கட்டம் தாண்டியபின் சொல்வதைச் செய்யமாட்டார்.

சொந்த யோசனை உள்ளவனுக்கே யோசனை சொல்லமுடியும். என்ன சொன்னாலும் சொந்த யோசனையுள்ளஅளவிலேயே பலிக்கும்.

சொந்த யோசனைஎன்பது பர்சனாலிட்டியாகும்.

✡ கதையில் மனைவி கணவருக்கும், அவரது நண்பர் பார்ட்னருக்கும் யோசனை சொல்வதால் பெண்என்ற இடத்தையோ, மனைவிஎன்ற இடத்தையோ தாண்டக்கூடாது. உரிய இடத்தைத்தாண்டி செயல்பட்டால், செயல் பலிக்காது.

பார்ட்னர் விவரமாகப் புரிந்து ஏற்பதுபோல் கணவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

புரியாமல் ஏற்கிறார்.

புரியாமல் ஏற்பவர், பிறகு புரியாமல் உளறுவார்.

புரியாதவருக்குப் பொறுப்பிருக்காது.

புரிவது பொறுப்பிற்கு அடிப்படை.

புரியாமல் பொறுப்பேற்க முடியாது.

தாயார் - ...அந்த வேலையைக் குறைந்தபட்சமாக, அதிகபட்சமாக எப்படிச் செய்வதுஎன நமக்குத் தெரியும்:

✡ எந்த வேலைக்கும் குறிப்பிட்ட பலன் என்பதில்லை, பரீட்சை எழுதினால் எவரானாலும் 60 மார்க்தான் வரும்என்ற சட்டமில்லை. புத்தகம் எழுதினால் 10,000 பிரதிகள் விற்கும்என்ற நிர்ணயமில்லை. எந்த வேலைக்கும் range ஏற்றத்தாழ்வுண்டு.

- ✡ ஏற்றம் எதனால் வருகிறது? தாழ்வு எதனால் வருகிறது?
- ✡ நாம் ஒரு லெவலில், உதாரணமாக மனம்என்ற லெவலில் செயல்படுகிறோம். மனத்திற்கு range வீச்சுண்டு. மேலே மனத்தால் மாறி மாறி இருபக்கமும் பார்க்க முடியும். அந்த நிலையில் மனம் சத்தியஜீவியத்துடன் தொடர்புகொள்கிறது. கீழே மனம் அடுத்த பக்கத்தைப் பார்க்க மறுக்கிறது. முழுவதும் மறுக்கும் நேரம் உணர்வோடு (vital) தொடர்புகொள்கிறது. இந்த வீச்சிருப்பதால் ஏற்றத்தாழ்வுண்டு.
- ✡ வாக்காளர் குறைந்தபட்சம் ஓட்டுப்போடலாம். அதிகபட்சம் MLAஆக நிற்கலாம். ஓட்டுமட்டும் போடும்பொழுது குடிமகனாக இருக்கிறோம். MLAஆக நிற்கும்பொழுது வாக்குரிமையால் பதவியை நாடுகிறோம்.
- ✡ வேலைக்கு வீச்சிருந்தால் நாமெப்படிச் செய்வது?
- ✡ நாம் செய்வது நம் நோக்கம் (attitude) என்ன என்பதைப்பொருத்தது.
- ✡ நமக்கு எப்படி நோக்கம் எழுகிறது?
- ✡ நோக்கம் நமக்கு. நாம் யார் என்பதைப்பொருத்து நோக்கம் எழுகிறது.
- ✡ நாம்,
    - ❀ உடலின் அகந்தையாக,
    - ❀ உயிரின் அகந்தையாக,
    - ❀ மனத்தின் அகந்தையாக,
    - ❀ உடலாக, அல்லது உயிராக, அல்லது மனமாக,
    - ❀ ஆத்மாவாக,
    - ❀ வளரும்ஆத்மாவாக இருக்கலாம்.
    - ❀ வளரும் ஆத்மாவுக்கும் மனம், உயிர், உடல்என்ற நிலைகள் உள்ளன.
- ✡ இப்பத்து நிலைகட்குள்ள 10 வகை நோக்கங்கள் உள்ளன.
- ✡ நோக்கம் செயலின் வீச்சை நிர்ணயிக்கும்.
- ✡ செயலின் பலனின் அளவைத் திறமை நிர்ணயிக்கும்.
- ✡ வீச்சுள்ள வேலையில் நாம் யார் என்பதைப்பொருத்து நோக்கம் நமது திறமையால் பலனின் அளவை நிர்ணயிக்கும்.



- ✡ நாம் யார்என்பது வேறு. நாம் யார்என்பதை உணர்வது வேறு.
- ✡ யார்என்பது நிர்ணயிக்காது. யார்என உணர்வது நிர்ணயிக்கும்.

கணவர் – பிள்ளைகள் குதர்க்கமாக இருக்கிறார்கள். கண்டிக்கிறேன் என்றால் கூடாதுஎன்கிறாய்;

தாயார் – அவர்களைத் திருத்த நாம் திருந்திக்கொள்ளவேண்டும்:

- ✡ குதர்க்கம்என்றால் கோணல் வழி.
- ✡ எது வழிஎன்று தெரிந்தால், கோணல்வழி புரியும்.
- ✡ சிருஷ்டியின் வழியும் (making the infinite finite), பரிணாமத்தின் வழியும் (finite becoming infinite) வழி, மற்றவை கோணல்வழி.
- ✡ பள்ளிக்கூடம் போவது மாணவனுக்கு வழி, அங்கு போகாமலிருப்பது தப்பு. பஸ்ஸ்டாண்டிற்குப்போய் கண்டக்டர், டிரைவருடன் பொழுது போக்குவது கோணல்வழி.
- ✡ ஒருவன் உழைத்துச் சாப்பிடுவது வழி, மற்றவர் உழைப்பால் சாப்பிடுவது கோணல்வழி.
- ✡ தகப்பனார் ஆபீசுக்குப்போய் வேலைசெய்வது முறை. காண்டீனிலும், மற்ற இடங்களிலும் அரட்டைஅடித்து வேலைசெய்யாமலிருப்பது கோணல்வழி, குதர்க்கம்.
- ✡ தகப்பனார் செய்வதைப் பையன் செய்தால், பையனைத் திருத்த தகப்பனார் தன்னைத் திருத்தவேண்டும். தகப்பனார்என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, தான் ஆபீசில் வேலை செய்யாமல், பையனைக் கண்டித்தால், பையன் பஸ்ஸ்டாண்டில் பொழுது போக்குவதை, பள்ளியில் வேறுவகையில் மனத்தால் செய்வான்; திருந்தமாட்டான்.
- ✡ மனிதன் சிருஷ்டியின் பகுதி.
- ✡ சிருஷ்டி, மனத்திலிருந்து வாழ்வுக்கும், வாழ்விலிருந்து உடலுக்கும் செல்கிறது.
- ✡ பரிணாமம் உடலிலிருந்து மீண்டும் வாழ்வுக்கும், மனத்திற்கும், சத்தியஜீவியத்திற்கும் செல்கிறது.

- ✡ தற்சமயம் (at the given moment) மனிதன் மனத்திலிருந்து சத்தியஜீவியத்திற்குப் போகவேண்டும்.
  - ❀ அதன் வழி சிந்தனையைவிட்டு மௌனத்தால், காலத்தைவிட்டு மூன்றாம்நிலை காலத்திற்கு, அகந்தையைவிட்டு சைத்தியப் புருஷனுக்குச் சமர்ப்பணத்தால் போவது.
  - ❀ அதைச் செய்யாமலிருப்பது சோம்பேறித்தனம், தவறு.
  - ❀ அதைச் செய்யாமல் அகந்தைவழிச் செயல்படுவது குதர்க்கம்.
  - ❀ அகந்தைவழிச் செயல்பட, சிறியதாக, கடந்தகாலத்தை வலியுறுத்தி, சிந்தனையால் செயல்படுவது குதர்க்கம்.
  - ❀ பெற்றோர் அன்னைவழி சென்றால், பிள்ளைகள் அன்னைவழிச் செல்வார்கள்.
  - ❀ கடன் வாங்கியவன், நஷ்டப்படும்பொழுது, கடனைத் திருப்பித்தர முடியாது.
  - ❀ வருமானம் வரும்பொழுது அவனுக்குக் கடனைத் திருப்பித்தரத் தோன்றாது. வேறு செலவு முக்கியமாகத் தோன்றும். அது குதர்க்கம்.
  - ❀ வாங்கிய கடனைத் திருப்பித்தருவது சரி.
  - ❀ காணிக்கை முதல் கடன்.
  - ❀ காணிக்கைக் கொடுக்கத் தோன்றாதது, கடனைத் திருப்பித்தரத் தோன்றாதது. அது குதர்க்கம்.
  - ❀ ஆத்மா, வேலை, பணம், உயிர், ஆகியவை முழுமையாகக் காணிக்கைக்கு உரியவை. அனைத்தையும் காணிக்கையாகத் தாராதவர் அர்த்தமற்ற பூஜ்யங்கள்.

பார்ட்னர் - நமக்கு உலகம் என்ன செய்யவேண்டுமோ, அதை நாம் பிறருக்குச் செய்யவேண்டும்என்பது நல்லசட்டமாயிற்றே;

தாயார் - பாக்டரியைப்பொருத்தவரை அந்த ஒரு சட்டம் போதும், நாம் உலகப் பிரசித்திபெற:



- ✡ பைபிளில் இந்தக் கருத்து வருகிறது.
- ✡ இந்தச் சட்டம் ஒரு பாக்டரியை உலகப் பிரசித்திபெறவைக்கும் என்றால் அந்தச் சட்டத்திற்கு உள்ளது என்ன சக்தி? (Infinite) அனந்தமான சக்தியாகத் தெரிகிறது.
- ✡ அனந்தம் எப்படி இச்சட்டத்தில் வரும்?
- ✡ நாம் அனந்தம் என்பது 1, 10, 100, 1,00,000;...... அனந்தம் என நினைக்கிறோம்.
- ✡ உலகமும், பிரபஞ்சமும் அனந்தம். நாம் அதனின்று பிரிந்து அகந்தையுள்ளிருக்கிறோம். அகந்தை அணுவானது (infinitesimal). அகந்தையைவிட்டு வெளியேறினால் அனந்தத்தின்முன் இருக்கிறோம்.
- ✡ உலகம்என்ற அனந்தம் நமக்குச் செய்யக்கூடியது அகந்தையை அனந்தமாக மாற்றுவது. நாம் அதை உலகுக்குச்செய்தால் நாமே நம்மை அனந்தமாக்குகிறோம்.
- ✡ Sears சீயர்ஸ் என்ற அமெரிக்கன் கம்பனி அமெரிக்காவில் "பொருள் திருப்தியில்லைஎன்றால் பணத்தைத் திருப்பித்தருகிறோம்"என்றது. இக்கம்பனி சப்ளையரிடம் பொருள் வாங்கும்பொழுது எதை எதிர்பார்க்கிறதோ, அதை தம் லட்சக்கணக்கான வாடிக்கைக்காரருக்கு வழங்கியது. அதன் விளைவாக அது சிறுகம்பனியிலிருந்து $50 பில்லியன் கம்பனியாயிற்று.
- ✡ அனந்தமான சக்தி இச்சட்டத்துள்ளிருப்பது புரியவேண்டுமானால், நம்மூர்க் கடைகாரரிடம் இதைச் செய்யச்சொன்னால் எதிர்ப்பு அனந்தமாக வருவதைக் காணலாம்.
- ✡ கோகோ கோலா கம்பனியில் தங்கள் டிஸ்ட்ரிபுயூட்டர்களை கோடீஸ்வரராக முயன்றார்கள், உதவினார்கள். அதுவும் இதுபோன்ற சட்டமே. அக்கம்பனியும் உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.
- ✡ IBMஎன்பது பிரபலமான கம்பனி. 1929இல் அமெரிக்கக் கம்பனிகள் ஏராளமாக மூடப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. கம்பனி முதலாளி வாட்சன் "எங்கள் கம்பனியில் ஒருவரையும் வேலை நீக்கம் செய்யப்போவதில்லை"என்றார். 'என் வேலையை இக்கம்பனி நீக்கக்கூடாதுஎன நான் பிரியப்படுவதுபோல் எவர் வேலையையும்

நான் நீக்கமாட்டேன்'என அவர் எடுத்த முடிவு வாட்சன் பெயரை உலகப்பிரசித்தியாக்கியது.

✡ அனந்தம் வாழ்வில் உலகப்பிரசித்தியாக வெளிவருகிறது.

தாயார் - புத்தியில்லைஎனப் புரிந்துகொள்ளும் புத்தி உனக்கு இருக்கிறதே போதாதா?

✡ யாருக்காவது ஏதாவது செய்யவேண்டுமானால் எரிச்சல் வருகிறது என்று தொடங்கிய உரையாடல் மேற்சொன்னதில் முடிகிறது.

- ❀ புத்தியில்லைஎன்பது ஒன்று.
- ❀ புத்தியில்லைஎனப் புரிவது வேறு.
- ❀ இல்லைஎன்று இன்று புரிந்தால் ஒரு நாள் அந்த புத்தி வரும். அதை negative achievement என்கிறோம்.

✡ முன்னேற்றம் positive, negativeஎன இருவகையானது.

- ❀ மனிதன் மெய்யைக் கடைப்பிடித்து முன்னேறலாம்.
- ❀ பொய்யைக் கடைப்பிடித்து, இது உதவாதுஎன்ற முடிவுக்கு வரலாம்.
- ❀ ஒன்று positive, அடுத்தது நெகட்டிவ்.

✡ ஏன் மனிதன் இருவிதமாக இருக்கிறான்?

- ❀ Choice காரணம்.
- ❀ நெகட்டிவாக இருப்பது சுலபம், அதனால் அது சரிஎனப்படும்.
- ❀ எனவே அதைச் செய்துபார்ப்பான், முடியாதுஎன அறிவது புத்தி கொள்முதல்.
- ❀ சுலபமானதை சரிஎன நினைப்பது vital உணர்வு.
- ❀ உணர்வாலானவன் அறிவை எட்ட நெகட்டிவாக முன்னேறுவது அது.

✡ ஒரு plane நிலையிலிருந்து அடுத்த நிலைக்குப்போக முயல்வது முன்னேற்றம்.



- ❀ அந்நிலையிலிருந்து முயல்வது - சுலபத்தைச் சரிஎனக் கருதுவது - நெகட்டிவ்.
- ❀ அடுத்த நிலை -அறிவு- க்குரியதை ஏற்று முயல்வது பாஸிட்டிவ்.

✡ யோகத்தில் சமர்ப்பணம் முக்கியம், முதற்கட்டம்.

- ❀ நம்மால் சமர்ப்பணம் செய்ய முடியவில்லைஎன அறிவது நெகட்டிவ் முன்னேற்றம்.
- ❀ தம் பிள்ளைகளைக் கண்டு அவர்கள் குறைகள் தம் குறைஎன அறிவது நெகட்டிவ் அறிவிலும் பாஸிட்டிவானது.
- ❀ தம் குறைகட்கு தம் பிள்ளைகளைக் கடிந்துகொள்வது (vitally negative recognition) உணர்வு நெகட்டிவாக அறிவது.
- ❀ தம் குறைகளைப் பிள்ளைகளிடம் கண்டு அவற்றைச் செல்லமாக வளர்ப்பது enjoying their vital defects obliviously குறைகளை நிறைவாகப் போற்றுவது.

பார்ட்னர் - ஒரு கம்பனியைப்பற்றி 8 கோடி, 80 கோடிஎனப் பேசியது நினைவிருக்கிறதா?

✡ ஒரு கடையில் பையன் வேலைசெய்தால் அவன் குடும்பத்தைக் காப்பாற்றுவான். அதே கடை அவனுடைய சொந்தக்கடையானால், அவன் செய்யும் வேலை அநேகமாக ஏற்கனவே செய்ததாகவே இருக்கும். அவன் குடும்பத்தைக் காப்பதுடன் பணக்காரனாவான்.

✡ செய்யும் வேலை ஒன்றே, உரிமை வேறு. பலன் 8 கோடிக்கும், 80 கோடிக்கும் உள்ள வித்தியாசமிருக்கும்.

✡ அன்பருக்கும், மற்றவருக்கும் உள்ள வித்தியாசம் இது.

✡ இருவரும் நடத்தும் வாழ்வு ஒன்றே. வாழ்வில் வித்தியாசம் குறைவு. பலனில் மாறுதல் பல மடங்கு.

✡ மனித வாழ்வு (life in force) சக்தியில் வாழ்வது.

அன்பர் வாழ்வு (life in being) ஜீவனில் வாழ்வது.

ஏராளமான வித்தியாசம் தெரிவது இதனால்தான்.

அன்பர் அன்னைச்சூழலில் வாழ்வதற்கும், அன்னையை ஏற்றுக் கொண்டு அவர் ஜீவியத்தை வெளிப்படுத்துவதற்கும், இதே போன்ற மாறுதல் அடுத்த கட்டத்தில் உண்டு.

- ❀ ஒன்று அன்னையைப் புறத்தில் ஏற்பது, அடுத்தது அகத்தில் ஏற்பது.
- ❀ இதைப்போன்ற மாறுதல் surface, depth மேல்மனத்திற்கும், ஆழத்திற்கும் உண்டு.
- ❀ மீண்டும் மனத்திற்கும், உயிருக்கும் பெரும்மாற்றம் அடுத்த கட்டத்தில் உண்டு.
- ❀ பழைய விவசாயத்திற்கும் நவீன விவசாயத்திற்கும் பலனில் இம்மாறுதலைக் காணலாம்.
- ❀ உரம் போடுவதற்கும், போடாததற்கும் உள்ள வித்தியாசம் இது.
- ❀ உரத்திற்குப்பதிலாக உரத்திற்குச் சமமான எருவைப் போட்டாலும் அதுபோன்ற மாறுதலிருக்கும்.
- ❀ மனப்பாடம் செய்வதற்கும், புரிவதற்கும் உள்ள மாறுதல் அது.
- ❀ ஆசிரியர் போதிப்பதற்கும், மாணவன் சிந்தித்து அறிவதற்கும் இதே மாறுதல் உண்டு.
- ❀ படிப்பில் சிந்தனைக்கும், மௌனத்திற்கும் இதுபோன்ற வித்தியாசம் பலனில் உண்டு.
- ❀ அதிகாரத்திற்கும், அன்பிற்கும் இது உண்டு.
- ❀ செல்வத்திற்கும், பண்பிற்கும் உள்ள வித்தியாசமும் அதுவே.
- ❀ பண்பிற்கும், பக்குவத்திற்கும் அதே வித்தியாசம் உண்டு.
- ❀ கண்காணிப்பதற்கும், நாணயத்திற்கும் இம்மாறுதலைக் காணலாம்.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**மறுப்பு ஆர்வமானால் திருவுருமாற்றம் ஏற்படும்.**



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**861) இல்லாததை நம்புவது மூடநம்பிக்கை. இருப்பதை நம்ப மறுப்பதும், அழிய மறுப்பதை ஏற்க மறுப்பதும் மூடநம்பிக்கை. ஒரு முறை கண்ட அனுபவத்தை முடிவாகக்கொள்ளும் அறிவீனம் ஒன்று; எதிர்காலத்தை ஏற்க மறுக்கும் அறிவீனம் அடுத்தது.**

*இல்லாததை நம்புவதும், இருப்பதை நம்பமறுப்பதும் மூடநம்பிக்கை.*

- ✡ ஊசி போட்டால் உடம்பு குணமாகும்.
- ✡ பட்டம் பெற்றால் நல்ல குணம் வரும்.
- ✡ தலைவர்கள் பெயரை குழந்தைக்கு வைத்தால், குழந்தை தலைவன் ஆவான்.
- ✡ சமஸ்கிருதம் படித்தவன் தெய்வ பக்தியுள்ளவன்.
- ✡ ஆங்கிலம் சரளமாகப் பேசுபவன் புத்திசாலி.
- ✡ ஞாயிற்றுக்கிழமையில் வேலை ஆரம்பித்தால் நாய் படாத பாடு படவேண்டும்.
- ✡ ஏழை மருமகள் அடக்கமாக இருப்பாள்.
- ✡ நாம் யாருக்கு உதவுகிறோமோ அவர் நன்றியுடனிருப்பார்.
- ✡ கம்பனி வளர பணம் உதவும்.
- ✡ சேவை செய்தால் மக்கள் ஓட்டுப்போடுவார்கள்,

என்பவை இல்லாதவை. பெரும்பாலோர் நம்புகிறார்கள்.

- ✡ வாடிக்கைக்காரரைத் திருப்தி செய்தால் வியாபாரம் வளரும்.
- ✡ அன்பாக வளர்ந்த குழந்தைகள் அடக்கமாக இருக்கும்.
- ✡ பண்பு தொழிலில் வெற்றி பெற உதவும்.

✡ ஒரு தலைமுறை ஊழல், அடுத்த தலைமுறையை அழிக்கும்.

✡ ஒருவருக்கு நாம் செய்யும் துரோகம் பலர்மூலம் நம்மை நாடிவரும்.

✡ அழகான பெண் கர்வி.

✡ அழகாகப் பழகினால், அனைவரும் ஆதரிப்பார்கள்.

✡ திறமையிருந்தால் பிரமோஷன் தானே வரும்.

✡ கேட்காமலிருந்தால் அதிகம் பெறலாம்,

என்பவை உள்ளவை. பெரும்பாலோர் இவற்றை நம்புவதில்லை.

❀ நம்பிக்கைஎன்பது அனுபவத்தால் வருவதில்லை.

❀ தன்னம்பிக்கையுள்ளவனுக்கு நம்பவேண்டியதன்மீது நம்பிக்கை வரும்.

❀ தன்னம்பிக்கையில்லாதவனுக்கு எதுமீதும் நம்பிக்கை வாராது.

❀ அறிவிலிக்கு ஆதரவாகப் பழகுபவர் சொல்வனஎல்லாம் சரிஎன நம்பிக்கை வரும்.

❀ அறிவுள்ளவனுக்கு அறிவால் தெளிவு ஏற்படும். நம்பிக்கை வரும்.

❀ அறிவுள்ளவன் அறிவைமட்டும் நம்பினால் நம்பவேண்டியதன்மீதும் நம்பிக்கை வாராது.

❀ நம்பிக்கை ஆத்மாவுக்குரியது.

❀ மூடநம்பிக்கை அனுபவமில்லாத அறிவிலிக்கு எழும் உணர்ச்சியின் இலட்சியம்.

❀ பழக்கமற்றதை நம்பமுடியாதவன் physical man உடலால் வாழும் ஜடம்.

❀ செக்கை வாங்க மறுக்கும் பாங்க்கும் உண்டு.

❀❀❀

**862) ஒரு முறை கண்டதில் உடலில் ஏற்பட்ட உணர்வை அறிவது மூடநம்பிக்கை. நடைமுறையில் ஒரு முறை கண்ட நிகழ்ச்சியைப் பொதுவான சட்டமாக மனம் ஏற்பது மூடநம்பிக்கை.**





✡ ஒரு விஷயத்தின் உண்மையை அறிந்து ஏற்பது நம்பிக்கை.

✡ இல்லாததை நம்புவது தவறு.

✡ அறியாமையால் அப்படி நம்புவது மூடநம்பிக்கை.

✡ மூடநம்பிக்கை ஏற்படும் விதங்கள் பல.

✡ நேற்று மாலை கொல்லையில் நரியைக் கண்டால், இன்று மாலையும் அங்கு நரி வரும்என நம்புவது சரியன்று.

✡ சத்தியஜீவிய சக்திக்கும், மற்ற சக்திகட்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு.

❀ கடையில் ஒரு பொருள் - சோப்பு - வாங்கினால், அடுத்த முறை அதே கடைக்குப் போனால் அதே பொருளை வாங்கலாம். எத்தனை முறை போனாலும் அது உண்மை.

❀ ஒருவர் பாடுவது நன்றாக இருந்தால், அடுத்து அடுத்து எத்தனை முறை அவர் பாடினாலும் நன்றாக இருக்கும்.

❀ நல்லவர் எத்தனை முறை பேசினாலும் மெய் சொல்லுவார்.

கெட்டவர் எத்தனை முறை பேசினாலும் பொய் சொல்லுவார்.

ஒரு முறை பலித்தது, வாழ்வில், பல முறையும் பலிப்பது வழக்கம்.

❀ சத்தியஜீவிய சக்தி ஒரு முறைபோல் அடுத்த முறை செயல்படாது. ஏனெனில் அது unique. ஒவ்வொரு முறையும் புதியதாக உருவெடுக்கிறது.

❀ முதல் முறை பிரார்த்தனையால் பலித்தால், அடுத்த முறை மனமாற்றத்தால் பலிக்கும். மூன்றாம் முறை சமர்ப்பணத்தால் பலிக்கும். பிரார்த்தனை திரும்பத் திரும்பப் பலிக்காது.

✡ முதற்பெண்ணிற்குத் தானாக நல்ல வரன் வந்தால், இரண்டாம் பெண்ணிற்கும் அதுவே வரும்என எதிர்பார்ப்பது நடக்காது.

✡ அப்படி ஏன் ஒருவர் எதிர்பார்க்கிறார்?

✡ உலகம் தெரிந்தவர் அப்படி எதிர்பார்க்கமாட்டார்.

✡ எதிர்பார்ப்பது - இதுபோல் எதிர்பார்ப்பது - அறியாமை.

✡ **அறியாமை பலவிதமானது.**

❀ **அனுபவமில்லாத அறியாமை.**

❀ **படிப்பில்லாத அறியாமை.**

❀ **அனுபவத்தால் பலன்பெறாத அறியாமைஎனப் பலவகையான அறியாமையுண்டு.**

✡ **இது எந்த வகையானது?**

✡ **தமக்குக் காரியமாக உலகம் ஒத்துழைக்கவேண்டும்என்று எதிர்பார்க்கும் அறிவு அறியாமையாகும்.**

✡ **அதுவும் ஒரு முறை நடந்துவிட்டால், அப்படிப்பட்ட அறியாமையுள்ள மனம் அதை விடாது.**

✡ **மனம் அனுபவத்தால் அறிவு பெற்று - அறிவு அனுபவச் சாரம் - அறிவை ஏற்று அனுபவத்தைப் புறக்கணிக்கவேண்டும்.**

**அனுபவத்தையே அறிவுஎனக்கொள்வது அறியாமை.**

*தொடரும்.....*

❀❀❀

**ஜீவிய மணி**

**பாதுகாப்பு பற்றாது. அடக்கம் தேவை.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சக்தியை முறைப்படுத்துதல் ஒருநிலைப்படுத்தலாகும். அப்படிக் கிடைத்த சக்தியால் உருவான செயலை இறைவனை நோக்கி அனுப்புதல் சமர்ப்பணம்.

***சக்தியை முறைப்படுத்தி, செயலை உருவாக்கி, இறைவனை நாடுவது சமர்ப்பணம்.***





## லைஃப் டிவைன்

கர்மயோகி

# 13. தெய்வீக மாயை

சத் செயல்பட்டு சிருஷ்டிக்கிறது. சத்புருஷன் தன் ஆனந்தத்திற்காக செயல்படுவது சிருஷ்டி. அதுவே நமது சத்தியம். அது நம் குணங்கட்கும், சுபாவத்திற்குமான ஆத்மா. நம் வாழ்வுக்குக் காரணமும், காரியமும், இலட்சியமும் அதுவே. அது நம் பிரகிருதி, இயற்கை. இவ்வழி அது சிருஷ்டிக்கின்றது. கவி, கலைஞன், பாடகன் சிருஷ்டிக்கின்றனர். அவர்களுள் வித்தாக உள்ளதை அவர்கள் விளக்கமாக வெளியிடு -கிறார்கள். சிருஷ்டியைக்கடந்த ஆத்மாவில் அது உறைகிறது. அது சிருஷ்டியில் ரூபமாக வெளிப்படுகிறது. அறிஞன், அரசியல்வாதி, இன்ஜீனியர் ஆகியவரும் அப்படியே சிருஷ்டிக்கின்றனர். வித்து அவர்களுள் மறைந்துள்ளது. அதை ஓர் உருவமாக அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். அப்படி வெளிப்படுவது அவர்களே. ரூபம் பெற்றாலும், அது அவர்களேயாகும். காலத்தைக்கடந்தவன் உலகை அப்படியே சிருஷ்டித்தான். சிருஷ்டிஎன்பது வெளிப்பாடு. அது தன்னை வெளிப்படுத்துவதன்றி வேறொன்றுமில்லை. விதையில் பரம்பொருள் உள்ளது. அது விதையிலிருந்து வெளிவருகிறது. அது ஜீவனில் முன்னதே உள்ளது. நடக்கப்போவது விதிக்கப்பட்டது. வெளிப்பாடு அதன் விதி. அது வெளிப்பாட்டின் ஆனந்தத்துள் முன்கூட்டியே அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்படுபவன் ஜீவன், ஆதியில் ஏற்பட்ட அமைப்பு. அது தன் சக்தியுள் அதை வைத்துள்ளது. அது இரகஸ்யமான சக்தி. அச்சக்தியை அது சுமக்கிறது. அது தன்னையறியும். அதன் வேகம் கட்டுப்படாதது. அவ்வேகம் அதை நிரப்புகிறது. ரூபமாக வெளிப்படுவதே அதன் நோக்கம். சிருஷ்டிப்பது ஜீவாத்மா. அவன் தன்னுள்ளிருந்து எழுகிறான். ஆனால், ஒரு மாறுபாடு. சக்தி வேறு, தான் வேறுஎன அவன் அறிவான். சக்தி

அவனுள் வேலை செய்கிறது. அவன் என்ற ஜடப்பொருளில் அது வேலை செய்கிறது. உண்மை வேறு. சக்தியே அவன். அவனுடைய ஜீவியம் தனித்தன்மை பெறுகிறது. அது அவனுடைய கருவி. அது அவனே. அவன் தான்எனும் பொருளைப் பயன்படுத்துகிறான். அதுவும் அவனே. அதன் விளைவாக ஒரு ரூபம் ஏற்படுகிறது. அதுவும் அவனே. அதை வேறுவகையாகக் கூறலாம். சத்என்பது ஒன்றே. சக்திஎன்பதும் ஒன்றே. ஆனந்தம்என்பதும் ஒன்றே. தன்னுள் பல இடங்களில் அது நிஷ்டையிலிருக்கிறது. ஒவ்வொன்றையும் பார்த்து அது, ‘‘இதுவும் நானே’’என்கிறது. அதன் இலக்கு சுயரூபம். அது லீலையின் மாற்று உருவம். அது சுயசக்தியின் லீலை. இங்ஙனம் அது வேலை செய்கிறது.

அது எதை உற்பத்தி செய்கிறதோ, அதுவே அது. அது அதைத்தவிர வேறெதுவுமாக இருக்கமுடியாது. அதற்கு ஜீவியத்தின் சக்தியுண்டு. அது தனக்குரிய சத்தை ஏற்படுத்திக்கொள்கிறது. அது ஒரு லீலையைத் தயார்செய்கிறது. அந்த லீலை ஒரு அலையோசை. அதன் ஆழத்துள் ஜீவனின் ஆனந்தமுள்ளது. அது ஜீவியம். அதுவே சத். அங்கிருந்து எண்ணங்கள் உற்பத்தியாகின்றன. அவை நம் போக்கை நிர்ணயிக்கின்றன. எல்லா வழிகளையும் அவை பயன்படுத்துகின்றன. சிறப்பான ஆனந்தமே இலட்சியம். அது ஆனந்தத்தின் பல ரூபங்களை நாடுகின்றது. அது ஜீவியத்தின் ஆனந்தம். அது அதன் அலையோசையின் ஆனந்த அலைகளாகும். சக்தியின் லீலையின் ஆனந்தமது. இந்த ஆனந்த ரூபங்களை அது அதிவேகமாகச் சேர்த்துக் கொள்கிறது. ஜீவனாக அது ஆனந்தத்தை நாடுகிறது. வெளிப்பாடே ஆனந்தம். அதில் ஜீவியம் உண்டு. அதில் சக்தியுண்டு. அவற்றை ஆனந்தமாகச் சித்திக்க அது முயல்கிறது. ஒரு ரூபம் உண்டு. அந்த ரூபத்தை எட்ட முயல்கிறது. அந்த ரூபத்தில் அது தன் சுயஜீவனை அதிகரிக்க முயல்கிறது. வெளிப்பாடாகவும், சிருஷ்டியாகவும் அதைச் சாதிக்க முயல்கிறது. ஆனந்தத்தை அதிகப்படுத்தி சாதிப்பதே அதன் முயற்சி. உலகில் பல விஷயங்கள் ஏற்படுகின்றன. அவை ஜீவனாக முயல்கின்றன. அதைத்தவிர வேறெதையும் அவை நாடவில்லை. இலட்சியம் முழுமை. அது தனிமனிதனுக்குரிய இலட்சியம். மனிதன் முழுமையின் பகுதி. இலக்கு அவர்களுடையது. அது சத்புருஷனுடைய இலட்சியம். முழுமைஎன்பது சத்புருஷனுடைய முழுமை. அதன் ஜீவியம், சக்தியுடைய இலட்சியம் அது. அதுவே ஆனந்தத்தின் இலட்சியம்.



தனிமனிதன் தன் வரம்புக்குள் தீவிரமாகச் செயல்படுகிறான். அவன் ரூபம் பெறுவதற்கு அது தடை. அந்த இலட்சியம் தனிமனிதனுக்குரியது அன்று. நாம் தேடுவது பூரணமுழுமை - பிரம்மத்திற்குரிய முழுமை. மனிதன் பகுதியான கண்டம். பகுதியின் சொந்த அமைப்புக்கு அது அன்னியமானது. ஆனால், சிறியதிலிருந்து பெரியது எழலாம். அதுவே மனிதனுக்கு முடிவான இலக்கு. தன் சத்தியத்தை அவன் தானே கண்டுபிடிக்கவேண்டும். சுயஞானத்தாலும், சுயசித்தியாலும் அடையப்பட வேண்டியது அது. அது அனந்தமான ஜீவனின் சத்தியம். அதன் ஜீவியம் அனந்தமானது. அது ஆனந்தத்தின் முடிவற்ற நிலை. மனிதன் தன்னை மீண்டும் பிரம்மமாகக் காண்பது அது. அது சத்தியம். சிறியது ஒரு முகமூடி. பல்வேறு தோற்றம் எழ அது ஒரு கருவி.

உலக லீலையை சச்சிதானந்தம் சாதித்தது. காலமும், இடமும் சத்துடைய வஸ்திரங்கள். அந்த லீலையின் சுபாவம் நாமறிவது. சிருஷ்டியின் ஆரம்பத்தை நாம் கருதவேண்டும். அடுத்தது கிரஹித்து மறைவது. சத்புருஷன் ஜடப்பொருளாவான். இருண்ட பொருளை துச்சமாகும்வரைத் துண்டாடலாம். சிறியதின் பல்வேறு தோற்றம் இம்மூன்றையும் தேடுகிறது. அடுத்தது வெளிவருவது. ஜீவனுள்ள சிந்திக்கும் ஜீவன் வெளிவருகிறது. ரூபம் பெற்ற ஜீவனிலிருந்து அது வரும். அதனுள் அது சிறைப்பட்டுள்ளது. அது தானே சிறைப்பட்டது. முடிவு விடுதலை. ரூபம் பெற்ற சிந்திக்கும் ஜீவனிலிருந்து அது வெளிவருகிறது. இவ்விதமாக அது தன்னைத் தானே அறிந்து சித்திக்கிறது. தன் ஐக்கியத்தையும், அனந்தத்தையும் சித்திக்கிறது. உலகில் அவை லீலையாக வெளிப்படுகின்றன. எனவே, தன் இரகஸ்ய ஜீவனை அது அடைகிறது. தன் சத்தை மீண்டும் பெறுகிறது. அத்துடன் ஜீவியம், ஆனந்தத்தையும் அடைகிறது. இதுவே உண்மையான காலங்கடந்த இரகஸ்யம். இது மூவகையான சலனம். உலகம்என்ற புதிருக்கு இது விடை.

பரிணாமம்என்பது புதியது. அது தோற்றத்தை விளக்குவது. வேதாந்தம் பரிணாமத்தின் எல்லா உண்மைகளையும் கூறுகிறது. அவற்றை பிரகாசிக்கச் செய்து, விளக்குகின்றது. வேதாந்தம் புராதனம். அது காலங்கடந்த சத்தியத்தைக் கூறுகிறது. இன்று விஞ்ஞானம் கூறுவதும் வேதாந்தம் கூறுவதும் ஒன்றே. பிரபஞ்சம் காலத்துள் படிப்படியாக வளர்வதாக அது கூறுகிறது. விஞ்ஞானி ஜடத்தையும், சக்தியையும்

ஆராய்கிறான். அவர்கள் பார்வை இருண்டது. வேதாந்தம் ஒளியைத் தாங்கிவருகிறது. அதை இன்றும் பாதுகாத்து வைத்துள்ளோம். விஞ்ஞானிக்கு வேதாந்தம் பயன்படும். மனம் இதன்மூலம் தன்னையறிந்து சுயம்பிரகாசமடையும். பழைய ஆசியர் கருத்தும், புதிய மேல்நாட்டார் எண்ணமும் இங்கு இணையலாம். உலகம் ஏற்கனவே அப்பாதையில் செல்கிறது.

அனைத்தும் சச்சிதானந்தம். நாம் அதைக் கண்டுகொண்டோம். இருப்பினும், அனைத்தையும் நம்மால் விளக்கமுடியவில்லை. பிரபஞ்சத்தின் சத்தியத்தை நாமறிவோம். ஆனால், நாம் உலகைத் தோற்றமாகக் காண்கிறோம். எப்படி அந்த சத்தியம் இந்தத் தோற்றமாயிற்றுஎன நாம் அறியோம். அந்த முறை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. புதிருக்கு நம்மிடம் விடையுள்ளது. சிருஷ்டி என்ற பூட்டுக்கு நம் விடை சாவி. நாம் இன்னும் சிருஷ்டியை அறியவில்லை. அது சத்து-சித்து-ஆனந்தம். அது நேரடியாகச் செயல்படுவதில்லை. பொறுப்பற்ற மந்திரவாதியுமன்று அது. ஒரு சொல்லால் அது உலகைச் சிருஷ்டித்தது. ஒரு முறை தெரிகிறது. ஒரு சட்டம் நம் கண்ணுக்குப் புலப்படுகிறது.

சட்டம் உண்டுஎன்பது சரி. நாம் அதை ஆராயும்பொழுது ஒரு சமநிலையைக் காண்கிறோம். மோதும் சக்திகள் லீலையில் நிதானம் பெறுகின்றன. லீலைக்கு ஒரு வழி ஏற்படுத்த ஓர் தீர்மானமிருப்பதாகத் தெரிகிறது. தற்செயலாக அது ஏற்பட்டுள்ளது. கடந்தகால நிகழ்ச்சிகளின் விளைவாக அது உண்டு. இதுவே நாம் காணும் உண்மை. ஆனால், இது முக்கியமில்லை. நாம் சக்தியைக்கடந்து போனால், இது முடிவன்று எனத் தெரியும். சக்தியைப்பொருத்தவரை இதுவே முடிவு. சக்திஎன்பது சத்துடைய சுயவெளிப்பாடு. நாம் அதைக் காணலாம். சத்திற்கு சுயமான சத்தியம் உண்டு. அது ஆட்சிசெய்கிறது. இனி நடக்கப்போவதை அது நிர்ணயிக்கிறது. அதன் முடிவையும் அதுவே நிர்ணயிக்கிறது. இவையிரண்டிற்கும் ஒரு தொடர்புண்டு. ஜீவியம் சத்தினுடைய சுபாவம். சத் ஜீவியத்தின் ஆதி. அது சக்தியின் சாரம். சத்தியம் சத்துடையதாக இருக்கும். அது சத் தன்னைப் புரிந்துகொள்வதாக இருக்கும். அது ஜீவியத்தினுடைய சுயஞானமாகும். அது ஜீவியத்தினுள் உள்ளது. இம்முறையை சக்தி மேற்கொண்டுள்ளது. இது ஞானத்தின் சக்தியாகும். தன் சக்திக்கு அது வழிகாட்டியாக இருக்க உதவுகிறது. இதுவே



நியாயமானது. இவை அனைத்தும் ஆதியில் பிரம்மம் தன்னை அறிவதால் ஏற்படுவது. எனவே, தன்னைத் தானே நிர்ணயிக்கும் சக்தியாகும் அது. இது பிரபஞ்ச ஜீவியத்தில் உள்ளது. அனந்தமான சத் தன்னையறியும். இது அதன் திறமை. இதனுள் ஒரு சத்தியம் உண்டு. இதற்கு சிருஷ்டிக்கும் திறன் உண்டு. இது சத்தியத்தின் பாதையில் அமையும். அப்படியே அதை வழிநடத்திச்செல்லும். அது பிரபஞ்ச சிருஷ்டியை ஆட்சி செய்யும்.

நாம் அனந்தஜீவியத்தை அறிவோம். அதன் பலனையும் அறிவோம். ஜீவியத்தின் செயல்கள் அப்பலன். இவற்றிடையேயுள்ளதைக் காணவேண்டும்*. முன்னோர் எழுதியவை ‘‘ஆண்டவன், ஜோதி பிறக்கட்டும்மென்றார், ஜோதி பிறந்தது’’. ஜீவியத்திற்கு சக்தியுள்ளதாக நாம் கொள்கிறோம். அத்துடன் ஜோதியற்றதிலிருந்து அதனால் ஜோதியை உற்பத்திசெய்ய முடியும்எனக்கொள்கிறோம். மேலும் ஒரு விஷயம். ஜோதி எழுந்ததுஎன நாம் கூறும்பொழுது ஒரு சக்தி நிர்ணயிக்கிறதுஎன நாம் கொள்கிறோம். அது தீவிரமான சக்தி. அது ஆரம்பத்திலுள்ள சக்தி போன்றது. அச்சக்திக்குப் பார்வையுண்டு. அது தோற்றத்தை வெளிப்படுத்தும். அது ஜோதியை வெளிக்கொணரும். தன் ஆரம்ப எண்ணப்படி அது செயல்படும். ஜோதியை மற்றவை ஆட்கொள்வதை அது தடுக்கும். ஒரு ரூபத்தை அழிக்க அளவற்ற பல சந்தர்ப்பங்களுண்டு. அனந்தஜீவியம் செயல்படுகிறது. அது அனந்தமாகச் செயல்கள் பல. அதன் செயல்கள் அனந்தம். அது அனந்தமான பலன்களை உற்பத்தி செய்கிறது. நமக்குக் குறிப்பிட்டது தேவை. அல்லது ஒரு முறையான சத்தியம் தேவை. ஒரு குறிப்பிட்ட உலகை நாம் சிருஷ்டிக்க விரும்புகிறோம். அது குறிப்பிட்டபடிச் செயல்படவேண்டும். பொறுக்கி எடுக்கும் திறன் தேவை. அது ஞானத்தின் திறமை. ஜடமான தோற்றத்தை உற்பத்திசெய்ய அது தேவை. அது அனந்தசத்தியத்திலிருந்து எழவேண்டும்.

இதை வேதரிஷிகள் அறிவர். அதை அவர்கள் மாயைஎன்றனர். அவர்கள் அனந்தஜீவியத்தை மாயையாகக் கண்டனர். மாயை சுயமானது, புரிந்துகொள்வது, அளப்பது, ரூபங்களின் சக்தியானது. ரூபம்எனில் வரம்பு. அனந்தஜீவியம் அளவற்ற சத்தியம். அது பரந்து விரிவது. மாயை அதனின்று உருவகப்படுத்துகிறது. மாயை அந்த உருவத்திற்குப்

*** இது அவசியமா? ஜீவியம்என்பது தன்னை அறிவது. அது அனந்தமானது. அது ரூபங்களைச் சிருஷ்டிக்கிறது. அந்த ரூபங்கள் சிருஷ்டியில் செயல்படுகின்றன. நிறுத்தாவிட்டால், அவை தொடரும்.**

பெயரளிக்கும். சத்தியம்என்பது உண்மை. அது சலனமற்றது. அதன் சத்தியம் சாரமானது. மாயை அதனினின்று சிருஷ்டிக்கிறது. அதனினின்று சலனஜீவனை எழுப்புகிறது. அதன் சத்தியம் முறையானது. அதைத் தத்துவமாகக் கூறலாம். பரம்பொருளில் அனைத்தும் அனைத்துள்ளிலும் உள்ளன. தடையில்லை. தடை பிரிக்கிறது. சிருஷ்டி லீலை. சத் சத்துடனும், சித் சித்தோடும், ஆனந்தம் ஆனந்தத்துடனும் விளையாடுகின்றன. இது தோற்றத்தின் வாழ்வு. மாயை இந்த லீலையை உற்பத்திசெய்கிறது. அனைத்தும் ஒன்றிலிருப்பது லீலை. ஒன்று அனைத்துள்ளும் உள்ளது. முந்தையது மறைந்துள்ளது. மனம் மறைக்கிறது. நாம் அதை மாயை என்கிறோம். மாயை திரையை ஏற்படுத்துகிறது. நாம் அனைத்திலும் உள்ளதை நம்பச்செய்கிறது. அனைத்தும் நம்முள் இருப்பதை அது மறைக்கிறது. அவன் அனைத்திலும் உள்ளான். மாயை நம்மை தனித்த ஜீவன்என நம்பவைக்கிறது. உண்மை என்னஎன்றால் அவன் எல்லா ஜீவன்களுடன் பிரிக்கமுடியாதபடி இரண்டறக் கலந்துள்ளான்.

இது தவறு. சத்தியஜீவிய லீலை உண்மை. இது மாயையின் உண்மை. நாம் இந்தத் தவற்றிலிருந்து விடுபட்டு சத்தியஜீவிய உண்மையை நாடவேண்டும். அங்கு 'ஒன்று', 'பல' என்பவை ஒரே சமயத்தில் செயல்படுகின்றன. அவை ஐக்கியமானவை, பிரிக்கமுடியாதவை. அது ஒரே உண்மை. பலவற்றை அது சின்னமாகச் சுட்டிக்காட்டும். இவை இரண்டும் சேர்ந்த ஒன்று. மனத்தின் மாயை மாயையின் கீழ்ப்பகுதி. அது ஏமாற்றவல்லது. அது நம்முன் உள்ளது. நாம் அதை ஏற்கவேண்டும். பின்னர், அதைக் கடக்கவேண்டும். அது ஆண்டவனின் லீலை. ஆண்டவன் இருளுடனும், பிரிவினையுடனும் லீலை புரிகிறான். ஆசை, அளவுடன் அவன் லீலை எழுகிறது. பிணக்கும், துன்பமும் அவன் லீலைக்குரிய கருவிகள். சக்தி அவனிலிருந்து வெளிப்பட்டது. அச்சக்திக்கு அவன் தன்னை உட்படுத்திக்கொள்கிறான். சக்தி இருண்டது. இருள் ஆண்டவனை இருளால் மறைக்கிறது. அதை அவன் ஏற்கிறான். மனத்தின் மாயை மாயையின் உயர்ந்த பகுதியை மறைக்கிறது. ஏற்றுக் கடப்பது சரி. சக்தி அவனிடமிருந்து முதலில் வெளிப்பட்டது. சக்தி ஒளி பெற்றால் ஆண்டவன் திருவுள்ளம் பூர்த்தி ஆகும். அக்காரணத்திற்காகவே சக்தி அவனிலிருந்து முதலில் வெளிப்பட்டது. சக்தியினின்று அவன் வெளிப்படுகிறான். வெளிப்படுவது லீலை. சத் அனந்தமானது. ஞானம் மிளிரக்கூடியது. சக்திக்குரிய



பெருமைகளுண்டு. அன்புக்குரிய பூரிப்புகளுண்டு. அவற்றிற்கு அளவில்லை. இந்த லீலைக்காக இறைவன் உலகைப் படைத்தான்.

மாயையின் மேற்பகுதிக்கும் கீழ்ப்பகுதிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அது ஓர் எண்ணம். அத்துடன் அது ஒரு தொடர்பு. அது பிரபஞ்ச உண்மை. தத்துவஞானிகள் அதை நழுவவிட்டார்கள். நம்பிக்கையற்றவரும் அதையறியார். அது மாயவாதம். அவர்களுக்கு அது புலப்படுவதில்லை, அல்லது அவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. தெய்வீகமனத்தை அவர்கள் மனம்எனக்கொள்கின்றனர். உலகை மனத்தின் மாயை சிருஷ்டித்ததாக அவர்கள் நினைக்கிறார்கள். உலகம் அப்படி சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்? அது ஒரு புதிராக இருக்கும். நம்மால் அதை விவரிக்கமுடியாது. அது ஒரு சிம்மசொப்பனமாக இருக்கும். அது நீரில் அலைகளால் சிதறப்பட்டதுபோலிருக்கும். அது தன்னையறியும் சத்தாக இருக்கும். அது உண்மையாக இருக்காது. அது மாயமாகவுமிருக்காது. அது குறிப்பிட்ட உருவம் பெற்றதாக இருக்கும். சத்தியஜீவியம் மேலேயுள்ளது. அது ஞானம், சிருஷ்டிக்கும் ஆட்சி செய்யும் ஞானம். கீழே அஞ்ஞானத்தில் சிறைப்பட்ட ஆத்மாவுள்ளது. மனம் இடைப்பட்டது. அது இடையிலிருந்து செயல்படுகிறது. சச்சிதானந்தம் கீழேயும் செயல்படும். சக்தியை அது கிரகித்துக்கொள்கிறது. தன்னை மறந்த நிலையில் அது உள்ளது. இச்செயல்கட்கு உருவம் உண்டு. சக்தி ரூபத்தில் மறைகிறது. ரூபம் அதன் செயல்கள். சக்தி மீண்டும் சச்சிதானந்தத்தை நாடுகிறது. இவ்விதம் அது இருளிலிருந்து வெளிவருகிறது. மனம் பல கருவிகளில் ஒன்று. சிருஷ்டிக்கும் பரிணாமத்திற்கும் அது கருவி. இறைவன் உலகை நாடிவர அது கருவியாகும். மனம் சிருஷ்டிகர்த்தா அன்று. மனம் இரகஸ்யமானது. பரிணாமத்தில் மனம் மேலே போக உதவும் கருவி. பிரபஞ்சத்திற்கு ஓர் ஆத்மாவுண்டு. அதுவே ஆரம்பம். அதுவே முடிவானது. மனம் ஆதியுமில்லை, உற்பத்தி ஸ்தானமுமில்லை.

சில தத்துவங்கள் மனம் உலகை உற்பத்தி செய்ததாகக் கூறுகின்றன. மனம் ஆதிசக்தி என்கின்றனர். தனக்கும், ரூபத்திற்கும் இடைப்பட்ட கருவியே மனம். அவை இரு வகையானவை. ஒன்று யதார்த்தம், அடுத்தது இலட்சியம். யதார்த்தம் பிரபஞ்சத்தை மனம், எண்ணம், கருத்து, ஆகியவை உற்பத்திசெய்ததாக நினைக்கிறது. இது நாமே வைத்துக்கொள்வது. சத்தியத்துடன் முக்கியமான தொடர்பு இருக்க

வேண்டும்என்ற அவசியமில்லை. சத்தியம்என்பது சத்திலிருந்து எழுவது. அது இருக்கலாம். அப்படியிருந்தால் அது பிரம்மம். அதற்கு உறவில்லை. அதை உலகுடன் சேர்க்கமுடியாது. உலகம்என்பது தொடர்பாலானது. இலட்சியவாதம் அதன்பின்னே சத்தியத்தைக் காண்கிறது. முன்னால் உள்ளது தோற்றம். தோற்றம் அழியக்கூடிய உருவம். அது கருத்திலிருந்து எழுவது. பின்னாலுள்ள சத்தியத்திற்கும், முன்னாலுள்ள தோற்றத்திற்கும் இடையே ஒரு தொடர்பைக் காண்கிறது. அது எதிரான உறவு. பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுவது மூன்றாம் நிலை. அது இலட்சியவாதத்தைக் கடந்தது. சிருஷ்டிக்கும் திறனுள்ள எண்ணத்தை அது (Real-Idea) முழு எண்ணம்எனக் கூறுகிறது. அப்படியெனில் அதற்கு சக்தியுண்டு. அது சித்-சக்தியின் சக்தி. அது உண்மையான ஜீவனைக் குறிக்கிறது. அது உண்மையான ஜீவனில் பிறந்தது. அது அந்த ஜீவனின் சுபாவத்தைப் பெற்றது. அது சூன்யத்தில் பிறந்ததில்லை. அது இல்லாததைப் புனைவதில்லை. அது ஜீவனுள்ள சத்தியம். அது ரூபமாக வெளிவருகிறது. ரூபங்கள் மாறும். அந்த ரூபங்கள் அதன் அடிப்படையினின்று எழுந்தவை. அந்த அடிப்படை அழியாதது. மாறவும் அதனால் முடியாது. உலகம் ஒரு கதையில்லை. அது மனத்தின் கற்பனையில்லை. பிரபஞ்சமனமும் அதைக் கற்பிக்கவில்லை. அது ஜீவனோடு பிறந்தது. மனத்தைக்கடந்தது அப்படிப் பிறந்துள்ளது. அது ரூபங்களாகப் பிறந்துள்ளது. அவை அவற்றின் சொந்த ரூபங்கள். தன்னையறியும் ஜீவனுக்கு சத்தியம் உண்டு. அது ரூபங்களுக்கு ஆதரவு. அச்சத்தியம் ரூபமாக வெளிப்படுகிறது. சத்தியத்திற்குரிய ஞானமுண்டு. அது வெளிப்பட்டால் சத்தியஜீவியமாகும். அது முழு எண்ணங்களை ஏற்படுத்துகிறது. அதைச் சுமுகமாகச் செய்கிறது. அவை வேறு அச்சில் வார்க்கப்பட்டவை. அவை மனம், உயிர், உடலைப் பற்றியவை. இந்த ரூபங்களுடைய ஜீவியம் தாழ்ந்தது. அவை பகுதியை வெளிப்படுத்துபவை. மனத்தைக்கடந்து உயர்வாக அவை வெளிப்படும். அது சத்தியஜீவியம் வெளிப்படுவதாகும். இந்த ரூபங்கள் பல வகையாக வளர்கின்றன. அவை இலட்சியத்தையடைய முயல்கின்றன. அந்த இலட்சியம் கடந்தது, மனத்தைக்கடந்தது. அவ்விலட்சியம் தன்னை சித்திக்க முயல்கிறது. தன் நிலையில் அது பாடுபடுகிறது.

பரிணாமக் கண்ணோட்டம் ஒன்றுண்டு. அப்பார்வைக்கு உலகிலுள்ள அனைத்தின் பின் சத்தியம் உண்டுஎனலாம். இலட்சியம் சத்தியம். அது சுமுகமான உண்மை. அது இடைப்பட்ட நிலை. அதுவே இலட்சியம். இலட்சியம் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. அது சத்புருஷனுடைய



மாறிய நிலை. இது தன் ஆதியை நோக்கிப் போகும். அந்த ஆதி முக்கியமான சத்தியம். அது அதன் ஆதியான முக்கியத்துவத்தைப் பெற முயல்கிறது. அதை முழுவதும் பெற முனைகிறது. அதைத் தீவிரமாகச் செய்யலாம். அல்லது, ஓர் இலட்சியத்தின்மூலம் செய்யலாம். அது இலட்சியத்தினின்று வெளிப்படுகிறது. மனம் மனித வாழ்வை குறையுள்ளதாகக் காண்கிறது. ஏன் அது குறையுள்ளதுஎன நாம் இப்பொழுது அறிவோம். மனத்திற்கு இயல்பான ஆர்வமுண்டு. இது சிறப்பை நோக்கிச் செல்கிறது. அது எப்பொழுதும் தன்னைக்கடந்தது. இலட்சியத்தில் சுமுகம் உண்டு. அது மறைந்துள்ளது. சிறப்பு அதை நாடுகிறது. இலட்சியத்தைக்கடந்து ஒரு பேர்எழுச்சியுண்டு. அது ஆத்மாவினுடையது. அது பரமாத்மாவை நோக்கிச் செல்கிறது. நம் ஜீவியத்திற்குப் பல விவரங்கள் உள. அதற்கோர் அமைப்புண்டு. அதற்கு அவசியம் உண்டு. எனவே மூன்று வகைகளாகச் சட்டம் ஏற்பட்டுள்ளது. பிரம்மமும், சிருஷ்டியும் எதிரானவை. அவை இரட்டை. இம்மூன்று நிலைகள் இரட்டையை இரத்து செய்யும்.

பிரபஞ்சத்தில் சத்துளது. மனம் அதை விளக்கும் திறன் பெற்றதன்று. நாம் அனந்தஜீவியத்தை அறிவோம். அது பிரபஞ்சமாயிற்று. முதலில் அது அனந்தமான ஞானமாக வேண்டும். நம்மொழியில் அதை நாம் எல்லாம் உணர்ந்ததுஎன்கிறோம். ஆனால், மனம் ஞானத்தின் கருவியில்லை. மனம் எல்லாம்வல்லதாகவும் இருக்கவில்லை. மனம் ஞானத்தைத் தேடும் கருவி. இவை முடிவான கருத்துகளில்லை. ஞானத்தின் சில ரூபங்களை மனம் பெறமுடியும். மனம் அக்கருத்தை சில செயல்களில் வெளிப்படுத்தமுடியும். மனம் கண்டுபிடித்தாலும், நிரந்தரமாகப் பெறமுடியாது. சத்தியத்தை மனம் நிறுத்திக்கொள்ள முடியாது. சத்தியத்தின் ஓர் அடையாளத்தை மனம் பெறவல்லது. அப்படிப்பட்ட அடையாளங்களை மனம் சேர்த்துவைத்துள்ளது. அவற்றை மனம் நினைவுஎன்ற பாங்கில் வைத்துள்ளது. தேவைப்பட்டபொழுது அதிலிருந்து எடுத்துக்கொள்ளும். மனம் அறியாது. மனம் அறிய முயல்கிறது. கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல் மனம் அறிகிறது. அது கலங்கலாக இருக்கும். உள்ளதை எடுத்துரைக்கும் திறனது. பிரபஞ்ச வாழ்வின் சத்தியத்தை அது எடுத்துக்கூறும். ஒரு முறையை ஏற்படுத்த நடைமுறையில் இந்த சக்தி தேவைப்படுகிறது. அது ஞானமுள்ள சக்தியில்லை. அது வாழ்வை நடத்தவல்லதன்று. எனவே மனம் உலகை

உற்பத்திசெய்திருக்க முடியாது. அதனால் உலகைத் தன்னுள்ளிருந்து வெளிப்படுத்தியிருக்கவும் முடியாது.

அனந்தமான மனம், வரையறையற்றதை, நாம் இருப்பதாகக் கொள்ளலாம். அது உலகை சிருஷ்டித்ததுஎனக் கொள்ளலாமா? மனம் என்றால் என்னஎன்று நாம் அறிவோம். நாம் மனப்போக்கை அறிவோம். அதன் விபரம் தெரியும். நாம் கூறுவது அதனினின்று வேறுபட்ட மனம். இது சத்தியஜீவிய உண்மையாகும். மனப்போக்குஎன்பது வரையறைக்கு உட்பட்டது. அனந்தமான மனம் அதுபோல் அமைந்திருந்தால், அது சிருஷ்டிக்க முடியும். அது அளவற்ற குழப்பத்தை ஏற்படுத்தும். பரந்தவெளியில் தற்செயலான அளவுகடந்த மோதல்கள் ஏற்படும். ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம். முடிவற்று அவை அலைந்து திரியும். அந்த இலட்சியத்தை நாம் தேடுவதாகும். அதற்குத் தடுமாற்றம்எனப் பெயர். அது தற்காலிகமானதாக இருக்கும். மனம் அனந்தமாக, எல்லாம் உணர்ந்ததாக, எல்லாம்வல்லதாக இருக்கும். அப்படியானால் அது மனமாகாது. அது சத்தியஜீவியமாகும்.

மனம் பிரதிபலிக்கும் கண்ணாடி. அது பிம்பங்களை உற்பத்தி செய்யும். அவை சத்தியத்தைப் பிரதிபலிக்கும். அல்லது நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும். அவை முன்கூட்டியே எழுந்தவை. நிகழ்ச்சிகள் மனத்திற்குப் புறம்பானவை. அல்லது சத்தியத்தைவிடப் பரந்தது. மனம் நிமிஷத்திற்கு நிமிஷம் செயல்படும். அது தோற்றத்தைப் பிரதிநிதியாக்கும். அவை இப்பொழுது நடப்பவை, அல்லது முன்கூட்டி நிகழ்ந்தவை. அதற்கு மேலும் ஒரு திறன் உண்டு. அது கற்பிக்கும் திறன். தனக்குத் தெரியாதவற்றின் உருவத்தை ஜோடனை செய்யும். இப்பொழுது உள்ளதை அல்லது இனிமேல் உற்பத்தியாகக்கூடியதை மனம் உற்பத்தி செய்ய வல்லது. அடுத்து, உடன்வரக்கூடியதை மனம் அறியமுடியாது. ஏற்கனவே நடந்ததை மீண்டும் திருப்பி நடக்கவேண்டுமானால் அது சாத்தியம். புதிய வெளிப்பாடுகளை முன்கூட்டி மனம் அறிவிக்கவல்லது. கடந்ததும், எதிர்கொள்வதும் சந்திப்பதினின்று மனம் அதைச் செய்கிறது. கடந்தது நடந்துமுடிந்தது. இனி வரப்போவது பூர்த்தியாகாத வாய்ப்பு. இம்முயற்சியில் மனம் சில சமயம் சில விஷயங்களில் வெற்றிகாணும். இவ்வெற்றி ஏறத்தாழ நிச்சயம். மற்றவை நடப்பதில்லை. அவை மனம் எதிர்பாராத ரூபங்களை உடையவை. மனம் திட்டமிடும் வழியைக்கடந்த காரணங்களுடையவை அவை.



இதுபோன்ற அனந்தமான மனம் அதற்குரிய அமைப்பை எழுப்பும். அப்படிச் செய்தால் தற்செயலான பிரபஞ்சம் எழும். அங்கு முரணான வாய்ப்புகள் எழும். அப்படி வரும் வாய்ப்புகள் நிலையற்ற உருவத்தைப் பெற்றிருக்கும். அது எப்பொழுதும் தற்காலிகமானதாக இருக்கும். அது அடித்துக்கொண்டு போகும்பொழுது எதுவும் நிலையற்றிருக்கும். அது உண்மையானதாகவோ, உண்மையற்றதாகவோ இருக்கலாம். அதற்குக் குறிப்பிட்ட நோக்கமோ, முடிவோ இருக்கமுடியாது. ஏராளமான நோக்கங்களிருக்கலாம். அவை அர்த்தமற்றவை. மேலிருந்து வழிநடத்தும் சக்தியொன்று இல்லாததால், அது அப்படியிருக்கிறது. இது யதார்த்தம். இதன் முடிவு சூன்யம், எதுவுமில்லைஎன்பது. அல்லது இது மாயாவாதத்தில் முடியும். அப்படிப்பட்ட பிரபஞ்சம் தன்னைப் பிரதிபலிக்காது. அது இல்லாததை நமக்களிக்கிறது. அது பொய். அது சிதைந்த பிரதிபலிப்பு. இங்கு எல்லாப் பிரபஞ்ச நிகழ்ச்சிகளும் மனத்தின் கற்பனையாகும். மனம் போராடி இந்நிலையைச் சமாளிக்கவேண்டும். அது எப்பொழுதும் வெற்றிபெறுவதில்லை. வெற்றி பெறாததற்குக் காரணம் அடிப்படையில் ஆத்மசத்தியமில்லை. இது பழைய நிகழ்ச்சிகளின் வேகம் தொடர்வது. அவற்றால் இது ஆட்கொள்ளப்படுகிறது. அது முன்னோக்கிப் போனபடியிருக்கும். நிர்ணயிப்பவரில்லைஎன்பதால் முடிவுஎன ஒன்றிருக்காது. முடிவில் அது தன்னைத் தானே அழித்துக்கொள்ளும். அல்லது சலனமற்று அது நிலைபெறும். இதன் ஆதியைக் கண்டால் அது சூன்யவாதமாகவோ, மாயாவாதமாகவோ இருக்கும். பிரபஞ்சத்தில் ஒரு புராதன எண்ணம் செயல்படுகிறது. அதைவிட உயர்ந்த பிரபஞ்ச சக்தியுண்டு. நம் மனப்போக்கு அதைப் பிரதிபலிப்பதாக நினைத்தால், சூன்யவாதமே முடிவாகும்.

நாம் இந்த ஞானத்தின் ஆதிசக்தியில் ஒரு பெரிய சக்தியைக் காண்கிறோம். அது நம் மனப்போக்கின் சக்தியைவிட உயர்ந்தது. இதைக் கண்டவுடன் நம் எண்ணம் மாறுகிறது. இதுவரை நினைத்தது தவறுஎனத் தெரிகிறது. இது பகுதியான உண்மை, முழு உண்மையில்லை. அது ஒரு சட்டம், தற்சமயம் பெறும் இலாபத்திற்கான சட்டம். ஆதிசத்தியத்தின் உண்மை அது இல்லை. அது முடிவான உண்மையுமில்லை. மனம், உயிர், உடலின்பின், அவற்றின் செயலின்பின் ஒன்றுளது. அது சக்திக்குக் கட்டுப்படாது. ஆனால், அது சக்தியைத் தழுவி, ஆட்கொள்கிறது. அது இவ்வுலகில் பிறந்ததில்லை. இவ்வுலகை அது புரிந்துகொள்ளவும் முயலவில்லை. ஆனால், தன் ஜீவனில் அது ஓர் உலகை சிருஷ்டித்துள்ளது.

அதைப்பொருத்தவரை அது எல்லாம் உணர்ந்தது. நிரந்தரமாக அது போராடவில்லை. அதனின்று வேறு ஒன்றை வெளிக்கொணரவும் அது முயலவில்லை. கடந்தகாலச் சக்திகள் பெருகிவருவதில் அது அலைபாய்கிறது. அதை இதனால் கட்டுப்படுத்தமுடியாது. ஒரு சிறப்பான ரூபம் உண்டு. அது ஜீவியத்திலுள்ளது. அது கொஞ்சம் கொஞ்சமாக மலர்கிறது. உலகம் ஒரு சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. இதை அது முன்கூட்டியறியும். முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்டதற்கு அது உட்படுகிறது. அது ஒரு தரிசனம். அது ஆதியான செய்தி. தெய்வீக சிருஷ்டியில் வளரும் உருவம் அது.

நாம் மனப்போக்கின்மூலம் வேலை செய்கிறோம். இதற்குத் தோற்றம் முக்கியம். பின்னாடியுள்ளது கலங்கலாகத் தெரிகிறது. நாம் அதை யூகிக்கிறோம். பின்னாடியிருப்பது உள்ளுறை சத்தியம். அது எப்பொழுதும் உள்ளது. நமக்கு ஒரு சட்டம் தட்டுப்படுகிறது. அது மீண்டும் மீண்டும் வரும் சட்டம். அது தொடர்ந்து சிறப்புப் பெறுவதைக் காண்கிறோம். எப்படியோ அது முன்கூட்டியே தெரிந்த விஷயம். எங்குப் பார்த்தாலும் சட்டம் தெரிகிறது. அது சுயமான ஜீவனில் உற்பத்தியானது. அதை நாம் ஊடுருவமுடியும். அது எப்படி ஏற்பட்டதுஎன நாம் அறியமுடியும். உடலோடு ஜனித்த ஞானத்திலுதித்த சட்டம் அது. அது சத்தில் தானே பிறந்த ஞானம். அது தன்னைத் தானே வெளிப்படுத்துகிறது. வெளிப்படும் சக்தியினுள் அது பொதிந்துள்ளது. ஞானம் வளர்த்த சட்டம் அது. அது முன்னேற்றத்திற்கு அவசியம். தெய்வம் நியமித்த இலக்கை நோக்கி அது செல்லும். அத்திசையை நோக்கி அது உந்தப்படுகிறது. இந்த திக்கற்ற ஓட்டத்திலிருந்து பகுத்தறிவு எழ முயல்கிறது. பகுத்தறிவு ஓட்டத்தை மீற முயல்கிறது. ஓட்டம் அதன் கையிலில்லை. அது நம் மனப்போக்கின் ஓட்டம். நாம் அதைக் காண்கிறோம். இங்குப் பகுத்தறிவின் உண்மையைக் காணலாம். பகுத்தறிவு தூதுவன். அது ஒரு பிரதிநிதி. உயர்ந்த ஜீவியத்தின் நிழல் பகுத்தறிவு. அதுவே அதன் இலட்சியம். தான் என்னஎனப் பகுத்தறிவு அறியும். பகுத்தறிவின் ஆதி ஞானம். அந்த ஞானமும், பகுத்தறிவும் ஒன்றே. செயல்களின் சட்டமாக அது செயல்படுகிறது. அப்படி நாம் கொள்ளலாம். ஞானம் தன் சட்டத்தைத் தானே நிர்ணயிக்கும். அது தனக்கு அதிபதி. என்ன நடந்ததுஎன அது அறியும். என்ன உண்டுஎனவும் அது அறியும். என்ன நடக்கப்போகிறது எனவும் அறியும். தன்னை அறிவதால் இத்தனையும் அதற்குத் தெரியும். தன்னை அனந்தமாக அறியும். காலத்திற்கும் தன்னை அது



அறியவல்லது. எனவே அதனால் அதைச் செய்யமுடியும். அப்படியிருப்பது அனந்தஜீவியம். எல்லாம்வல்ல அனந்தஜீவியம் அது. அதற்கோர் உலகம் உண்டு. உலகத்தை ஏற்படுத்த தன்னில் சுமுகத்தை நிலைநிறுத்தும். உலகம் அதன் ஜீவியத்தின் இலக்கு. அதை நாம் ஏற்கலாம். எண்ணம் அதைப் பற்றிக்கொள்ளமுடியும். தன்னை பிரபஞ்ச சத்தியமாக அது அறியும். அது தன் சத்தியத்தை அறியும் சத். தன் சத்தியத்தை ரூபமாகச் சித்திக்கிறது. அது அந்த ரூபங்களை அறியும்.

நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தக்கூடாது. நம்முள் நாம் ஆழ்ந்து இலயிக்கவேண்டும். அது மனிதனின் இரகஸ்ய மையம். அங்குச் சலனம் செயலற்றுப்போகும். சலனமற்ற அமைதியில் உயர்ந்த ஜீவியம் தெரியும். அது நமக்கு வெளிப்படையாகத் தெரியும். நமக்கு அது சிதைந்து தெரியும். சிதைவது நம் மனம் எரிச்சல்படுவதால் ஏற்படுவது. எரிச்சல் பழக்கம். மனம் தன்னை அப்படி அளவுக்குட்படுத்திக்கொள்கிறது. அளவுக்கு உட்பட்டால் தெரிவது தெளிவாக இருக்கும். அங்கு வளரும் ஜோதியுண்டு. பகுத்தறிவு பிரகாசமற்றது. அலைபாயும் சுடர், நிலையானதன்று. ஏற்கனவே இந்த உயர்ந்த ஜீவியத்தை பகுத்தறிவால் அறிந்தோம். இப்பொழுது நிச்சயமாக அறிவோம். ஞானம் அங்கு காத்துள்ளது. அது மனத்தைக்கடந்து வீற்றுள்ளது. அறிவின் வீச்சுக்கு ஞானம் அப்பாற்பட்டது. அதைக்கடந்து சுயமான காட்சியுண்டு. அது அளவற்றது; பிரகாசமானது. அங்கு ஞானம் அரியாசனத்தில் வீற்றுள்ளது.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நெடுநாளாகக் கடவுளையறிய முயன்று தோற்றவன், திடீரென, “எப்படி இச்சிறுமை அந்த வானளாவிய பெரியதை அறியமுடியும்”என உணர்கிறான். அதே நேரம் நெடுநாள் கிடைக்காத ஞானம் கிடைக்கும். ஏனெனில் தன்னால் முடியாதுஎன்ற ஞானம் அடக்கமாகும்.

***தன்னால் முடியாதுஎன்ற ஞானம் அடக்கமாகும்.***

# அன்பர் கடிதம்

அன்னை புரிந்த ஏராளமான அற்புதங்களில் சிலவற்றைக் கூறுகின்றேன். ஏனெனில், அனைத்தையும் கூறவேண்டுமானால் வாழ்க்கை முழுவதும் கூறிக்கொண்டே இருக்கலாம். "**ஆயிரம் தவறுகள் செய்துவிட்டாலும் கவலையை விடு. நினைவுடன் என்னைப் பற்றிகொள்ளமட்டும் மறந்துவிடாதே**"என்று அன்னை கூறியது என்னை அடிக்கடி நெகிழச்செய்கிறது. அன்னை நமக்கு எவ்வாறு, எப்பொழுது உதவலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அன்னையைச் சிறிது நினைத்தாலும் உடனே சிறிதுகூட தாமதிக்காமல் உடனே வந்து அருள் புரிவார்கள். அன்னையின் பேரருளை நினைத்தால் உடல் சிலிர்க்கிறது. எனக்கு அன்னை புரிந்த உதவிகளைக் கூற விரும்புகிறேன்.

அன்னையின் அருளால் எனக்கு பி.காம். சேர காலேஜில் இடம் கிடைத்தது. என் கல்லூரியில் ஓரளவு எல்லா டிபார்ட்மெண்ட்டிலும் அன்னை அன்பர்கள் இருப்பார்கள். அத்தகைய இடத்தில் படிக்கின்றோம் என்று நினைக்கையில் மகிழ்ச்சியாக இருக்கும்.

பைனல் செமஸ்டர் exam நடந்துகொண்டிருந்தது. *2.5.05* எனக்கு Income tax exam. முதல் நாள் *(1.5.05)* அன்று தியானம் அன்னையின் அருளால் நன்றாக நடந்தது. இரவு குளிர்ந்த காற்றுடன் மழை பொழிந்தது. அன்னையின் அருள்என்று சந்தோஷமாகப் படித்துக்கொண்டிருந்தேன். கரண்ட் இல்லை. இருப்பினும் அன்னை பார்த்துக்கொள்வார்கள்என்ற நம்பிக்கையுடன் படித்துக் கொண்டிருந்தேன். மறுநாள் *(2.5.05)* அன்றும் மழை காலையில் பெய்தவண்ணம் இருந்தது. அன்னையிடம் சமர்ப்பணம் செய்த பூக்களைக் கையில் வைத்துக்கொண்டு படிப்பது என் வழக்கம். படித்தபின்பு பூக்களை என் புக்ஷெல்பில் வைத்துவிட்டு examக்குக் கிளம்பினேன். பின்னர் அன்னையிடம் பிரார்த்தனை செய்து "**சாவித்ரி**" புத்தகத்தில் உள்ள *15*வது பக்கம் படித்துவிட்டு, இல்லத்திலிருந்து அன்னையை அழைத்துக் கொண்டு புறப்பட்டேன். அன்னையை எப்பொழுதும் என்னுடன் அழைத்துச்செல்வது வழக்கம். அதேபோல் அன்றும் செய்தேன். அம்மா என்னைப் பாதுகாப்பாக அழைத்துச்செல்வார்கள். தினமும் என்னுடன் என் தந்தை பஸ் ஸ்டாண்டுக்கு வருவார். *2.5.05* அன்று பஸ் வரவில்லை. அரை மணி



நேரமாக பஸ் இல்லை. பஸ்ஸ்டாண்டில் கூட்டம் குவிந்தது. வழுத்தூர் அருகே அதிக மழையால் பாலம் உடைந்துவிட்டது. ஆகவே, பஸ் எல்லாம் வருவது நிச்சயமில்லைஎன்று சிலர் பேசிக்கொண்டு இருந்தனர். பிரைவேட் பஸ் ஒன்று வந்தது. அதிகக் கூட்டமானதால் நான் அதில் ஏறவில்லை. பிறகு பஸ் ஏதும் வரவில்லை. அன்னை, அன்னைஎன்று மனதில் கூறினேன். டவுன் பஸ் வந்தது. என் தந்தை, "ரூட் பஸ் வாராது. இதில் போகிறாயா?" என்றார்.

அன்னையின் அருளால் 'நான் இதில் செல்லமாட்டேன்'என்று சட்டென்று கூறிவிட்டேன். எப்பொழுதும் யோசித்து பதில் கூறும் நான், அன்று சட்டென கூறியது அன்னை அருளால்தான். அந்த பஸ்ஸிலும் ஏறவில்லை. பிறகு அரை மணி நேரம் சென்றது. ஒரு பஸ்ஸும் வரவில்லை. பிறகு பதட்டத்துடன் அன்னைஎன்று கூறியபடி இருந்தேன். மணி எட்டரை ஆனது. பிறகு என் தந்தை இனி தாமதித்தால் examக்குத் தாமதமாகிவிடும். ஆகையால் காரில் சென்றுவிடலாம்என்றார். சரிஎன்று ஒரு டாக்ஸியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினோம். அப்பா உள்ளே சென்று காருக்குப் பணம் கொடுக்க பணம் எடுக்கச் சென்றார். அதற்குள் என் மனம் கலங்கி "அன்னையே நீங்கள்தான் என்னை காப்பாற்றவேண்டும்" என்று கூறியபடி, (அன்னை கண் படம் entranceஇல் மாட்டியிருக்கும்) அன்னையின் கண்களைப் பார்த்தபடி "அம்மா, என்ன குழப்பம் இது, நீங்கள்தான் என்னை காக்கவேண்டும்''என்று பிரார்த்தனை செய்தேன். பின்னர் இல்லத்திலிருந்து புறப்பட்டோம். காரில் வேகமாக சென்றுகொண்டு இருந்தோம். கரந்தை அருகில் பார்த்தால் 'நான் ஏறமாட்டேன்'என்று கூறிய டவுன் பஸ்ஸுடன் ஏராளமான பஸ்ஸும், காரும் நின்றவண்ணம் இருந்தது. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே எங்களின் கார் டிரைவர் நாங்கள் சென்ற காரை முன்னே செலுத்தினார். அங்கு பார்த்தால் சாலைமறியல். இரு புறமும் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தது. எங்களது கார் புறப்பட முற்பட்டபோது அக்கூட்டம் எங்களை நோக்கியது.

அதில் சிலர் காரை அடித்து, "நாங்கள் இங்கு போராடுகின்றோம். உங்களுக்கு என்ன அவசரம்? காரை நிறுத்தப்போகிறாயா, இல்லையா?" என்று மிரட்டினர். அன்னை அருளால் right sideஇல் ஒரு ரோடு போனது, குறுகிய தெரு. அங்குள்ள டீக்கடைக்காரர்கள் விரைவாக இந்த ரோடு

வழியாகச் செல்லுங்கள்என்று வழிவிட்டார்கள். சட்டென்று அதில் புகுந்து 9.10 மணிக்கு காலேஜ் சென்றோம். 9.30க்கு exam.

Exam hallக்கு வெளியில் வந்தபோது என்னுடன் பயிலும் மாணவி நடந்ததை கேள்விப்பட்டு நீ இன்று examக்கு வந்தது நீ கும்பிடும் அந்த அன்னையின் அருள்தான்என்றாள். அன்னையைப்பற்றி அவள் கூறியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டே exam எழுதினேன். அனைத்து தடைகளிலிருந்தும் அன்னை என்னைக் காப்பாற்றியிருக்கிறார்கள்என்பதை உணர்ந்து பூரித்துப் போனேன். அன்னையின் அருளால் கேள்வித்தாள் ஈஸியாக இருந்தது. அன்னைக்கு நன்றியைச் சமர்ப்பித்தேன். 14.6.05அன்று ரிசல்ட் வந்தது. அன்னையின் அருளால் first classஇல் பாஸ் செய்தேன். 2.5.05அன்று எழுதிய Income tax paperஇல் அதிக மதிப்பெண்களை எனக்கு அளித்த அன்னைக்கு கோடானகோடி நன்றிகளைச் சமர்ப்பணம் செய்கின்றேன். அன்னை நம்மை எப்பொழுதும் காப்பாற்றுவார்கள். அன்னையின் அருளால் நான் MBA படித்து, நல்ல உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு அன்னைதான் அருளவேண்டும். என்னை நல்ல வழியில் அன்னைதான் அழைத்துச்செல்லவேண்டும்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எப்பொருள் நமக்கு ஏராளமாகத் தேவைப்படுகிறதோ அதைச் சுலபமாகப் பெறும் வழியொன்றுண்டு. தெய்வத்திற்கு அப்பொருளைக் காணிக்கையாக அளித்தால் அபரிமிதமாக அது நம்மை நாடிவரும். அதைவிடச் சிறந்த முறை அப்பொருளை அடுத்தவர்க்குக் கொடுப்பதாகும். உதாரணமாக அபரிமிதமான அன்பு தேவைப்பட்டால், உன் அன்பை மற்றவர்க்குச் சமர்ப்பணமாகவும், தெய்வக் காணிக்கையாகவும் செலுத்தவேண்டும்.

***மனிதனிலுள்ள தெய்வத்தின் அபரிமிதமான அம்சம்.***





# அன்னையின் ஸ்பர்ஸம்

இல.சுந்தரி

குழந்தை ஆசைப்பட்டாள்என்று சின்னஞ்சிறு அம்பாள் விக்ரகம் வாங்கித்தந்தார் காசிநாதன். அதை எந்நேரமும் பிரியாதிருந்தாள் குழந்தை பூமா. பள்ளிக்கூடம் போகும்போதுகூட சிறிய பெட்டிக்குள் வைத்து யாருமறியாமல் எடுத்துப்போவாள். பல நேரம் அவள் அந்த விக்ரகத்துடன் தனிமையில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பாள்.

ஒரு சமயம் அப்பா அங்கு வந்துவிடவே அவளுக்கு வெட்கமாயிற்று. “என்னம்மா செய்கிறாய் அங்கே? யாருடன் பேசிக்கொண்டிருக்கிறாய்?” என்று சட்டையைக் கழற்றி கோட்ஸ்டாண்டில் மாட்டியவாறு யதார்த்தமாய்க் கேட்டார் காசி.

“அப்பா! நீ வாங்கித்தந்த அம்பாள் என்னுடன் பேசுவதில்லை”என்று ஏக்கத்துடன் கூறினாள்.

“பேசுவார் அம்மா. நீ சரியாகக் கவனித்திருக்கமாட்டாய்”என்று சமாதானம் செய்தார்.

அம்மா உடனே ஒரு புகைப்படத்தைக் கொண்டுவந்தாள்.

“பூமா, இதில் இருப்பது யார்?”என்றாள்.

“அது நான்தான். அது என்னுடைய போட்டோ”என்று திருத்தமாய்ப் பதில் கூறினாள்.

“இது பேசுமா?”என்றாள் அம்மா.

“அது வெறும் போட்டோ. அது பேசாது. ஆனால் நான் பேசுவேனே” என்றாள் சிறுமி. “அதுபோலத்தான் இந்தப் பொம்மை பேசாது”என்று கூறி அம்மா அவளைச் சமாதானப்படுத்தினாள்.

“அப்படியென்றால் நிஜ அம்பாள் எங்கே? அவரும் என்னைப்போல பேசுவார் அல்லவா?”என்று கேட்கவே அம்மா திணறினாள்.

“நிஜ அம்பாள்தானே. ஒரு நாள் உனக்கு அவரைக் காட்டுகிறேன்” என்றார் அப்பா. அவ்வளவுதான், பூமா சதா அவரை நச்சரித்தாள்.

“சரி, நாளைக்கே நாம் நிஜ அம்பாளைப் போய்ப் பார்த்துவருவோம்” என்றார்.

“அவர் பேசுவாரா?”என்றாள்.

“பேசுவார். தேவைப்பட்டால் பேசுவார்”என்றார் அப்பா.

“ஏனிப்படி ஏதாவது சொல்லிக் குழந்தை மனதைக் கலைக்கிறீர்கள்?” என்றாள் அம்மா.

“நான் சொல்வது ஏதாவதுமில்லை, மனதைக் கலைப்பதுமில்லை” என்றார் அப்பா.

“தெய்வத்தை நேரில் பார்க்க முடியுமா, என்ன?” என்கிறாள் அம்மா.

“முடியாது என்பவர்க்கு முடியாது. முடியும் என்பவர்க்கு முடியும்” என்றார் அப்பா.

“இந்தப் பதில் எனக்குச் சரியாகப் படவில்லை”என்றாள் அம்மா.

“சரி. வேறுவிதமாகச் சொல்லட்டுமா?”என்றார் அப்பா.

“நீங்கள் எப்படிச் சொன்னாலும் சரி. கடவுளை நேரில் பார்ப்பது என்பதெல்லாம் புராணங்களில் வருவது. நாம் யாரும் பார்க்கமுடியாது”.

“இல்லை கனகா. மனிதனின் மனம் வக்கிரமாய் இருக்கிறது. இந்தப் பாவனைதான் கடவுளை நேருக்கு நேர் பார்ப்பதைத் தடுக்கிறது. அதை விட்டுவிட்டால் கடவுள் புலப்படுவார்”என்றார் காசி.

“ஆமாம். எதையாவது சொல்லி குழந்தை மனதை மாற்றிவிடாதீர்கள். நமக்கிருப்பது ஒரு குழந்தை. அவள் என்னை மறந்துவிட்டால் எனக்குத் தாங்காது”என்று அழுதாள் கனகா.

*(**அகந்தை, அன்னையை விலக்கும் முறைகளில் இதுவும் ஒன்று. பாசத்தின் பெயரால் பரமனிடமிருந்து பக்தனைப் பிரிப்பது. அன்னை சொல்வாராம், "குழந்தைகளால் எப்பொழுதும் பிரச்சினையில்லை. அவர்கள் பெற்றோர்கள்தாம் பெரும்பிரச்சினை"என்று**).*

மறுநாள் பாண்டிச்சேரி ஆஸ்ரமத்தில் தரிசன வரிசையில் தன் தந்தையாருக்குப்பின் பூமா நின்றிருந்தாள்.

ஓரழகிய தாய் தழையப் புடவையுடுத்தி தலையில் முக்காடிட்டு கம்பீரமாய் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றி கோடி



சூரியப்பிரகாசம். கண்களும், முகமும் பூஞ்சிரிப்பால் மலர்ந்து ஒளி வீசுகிறது. அவரின் இருபுறமும் வண்ணமலர்க்கொத்துகளை ஏந்திநிற்கும் பூஞ்செடிகள். ஒரே அமைதிவெள்ளம். அன்பர் வரிசை முன்னேற முன்னேற சிறிதும் சளைக்காமல் மலர்க்கரங்களால் விரைவாக பிரசாதங்களை வழங்குவதும், அன்பர்கள் மனமின்றி அகல்வதும் கண்கொள்ளாக் காட்சி. பூமா தன் முறை வரும்வரை இருபுறமும் தலையை சாய்த்து சாய்த்து அவரை தரிசித்தவண்ணமிருந்தாள். தந்தையின் முறை முடிந்து அவள் முறை வந்துவிட்டது. இதோ அவள்முன் அவள் நீண்டநாட்களாய்க் காண ஆர்வமுற்ற பேசும் தெய்வம். அவ்வளவு அருகில் அந்தத் தெய்வசக்தியைப் பார்த்தது உடல் புல்லரித்தது; மனம் நெகிழ்ந்தது; நெஞ்சு பரவசத்தால் விம்மியது.

யாரும் எதிர்பாராதவிதமாக சட்டென்று அவர் கால்களைப் பற்றிக்கொண்டு தேம்பினாள். வரிசை காத்திருப்பதை உணர்ந்த ஸ்ரீ அன்னை அவளைத் தூக்கிஎடுத்துப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு வரிசையை ஆசிவழங்கி முடித்தார். சரேலென எழுந்தார். மீண்டும் பூமா அவர் கால்களைப் பற்றிக்கொண்டு அழுதாள். சாதகர்கள் அவளை விலக்க முற்பட்டபோது அன்னை அவர்களைத் தடுத்தார். அவளைத் தம் இடக்கரத்தில் பற்றித் தரதரவென இழுத்துச்சென்றார். வெளியே அவள் தந்தை காத்திருந்தார். தம் மகளை மன்னிக்கவேண்டும்என்று சாதகரிடம் உருக்கமாக வேண்டினார். அதற்கு அச்சாதகர், “அவளைப் பற்றிய முடிவை அன்னைதான் தீர்மானிப்பார்”என்று கூறினார்.

அன்னை அவள் கண்களை உற்றுப்பார்க்கிறார். முறைப்பதுபோல் தோன்றுகிறது.

“நீ என்னுடன் இங்கேயே இருக்கப்போகிறாயா?”என்று கடுமையாய் வினவுகிறார்.

அந்தக் கடுமையைக் கண்டு அஞ்சி அவள் திரும்பிப் போய்விடுவாள் என்று எல்லோரும் தீர்மானமாய் நம்பிக்கொண்டிருந்தபோது, யாரும் சிறிதும் எதிர்பாராத அதிர்ச்சியாய், “ஆம், உங்களுடன்தான் இருக்கப் போகிறேன் *(**நீங்கள்தான் வேண்டும்**)*”என்கிறாள்.

அன்னை அவளை ஆழ்ந்து பார்க்கிறார். எல்லோரும் அச்சமாய் உணர, அவள்மட்டும் மலர்ந்து சிரிக்கிறாள்.

“சரி, இவளுக்கு இங்கேயே தங்க ஏற்பாடு செய்துவிடுங்கள்”என்று கூறி, மீண்டும் ஒரு முறை அவளைத் திரும்பிப் பார்க்கிறார். அவர்

இதழ்களில் குறுஞ்சிரிப்பு ஒன்று மலர்ந்து சூழலில் மணம் வீசுகிறது. 'ஜில்'என்ற குளிர்க்காற்று அங்குள்ள அனைவராலும் உணரமுடிகிறது.

அவள் தந்தை பல நாள் காத்திருந்து திரும்பிவிட்டார்.

அவள் எல்லோருடைய வியப்பிற்கும்ஆளாகி எல்லோர் கவனத்திற்கும் உரியவளாகிவிட்டாள். அன்னை அவளிடம் அதிகார தோரணையில் பேசுகின்றார். கடும்பார்வை பார்க்கிறார். சில நேரம் அடிக்கக்கூடச் செய்வார். இவற்றால் அவள் வருந்தி செய்வதறியாது தவிப்பாள் என்றெண்ணி எல்லோரும் தனித்தனியே அவளிடம் பேச்சுக் கொடுக்கின்றனர். அவள் மலர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவுமிருக்கிறாள். திரும்பிப் போகமாட்டேன்என்கிறாள்.

இது என்ன வியப்பு? அவளுக்குப் பைத்தியமா? இது ஒருபுறமிருக்க, அங்கு, அவள் வீட்டில் பூமாவின் தாய் அவள் தகப்பனாரோடு சண்டையிட்டுப் புலம்புகிறாள்.

"குழந்தை ஏதோ பிடிவாதம் செய்தாளென்று அங்கேயே விட்டுவிட்டு வந்தீர்களே. இது சரியா? அவள் இரவில் என்னைவிட்டுத் தனியாக படுத்துறங்கவும்மாட்டாள். என் குழந்தையை யாரைக் கேட்டு அந்தச் சன்னியாசி அம்மாவிடம் விட்டுவந்தீர்கள்? அவள் வரமாட்டாள்என்று கூற அவர் யார்? போய் அழைத்துவாருங்கள். என்னையாவது அங்கு அழைத்துப்போங்கள். நான் பேசிக்கொள்கிறேன்"என்கிறாள் அம்மா.

"கனகா நீ தெரியாமல் பேசுகிறாய். அவர் சன்னியாசினி அல்லர். **மானுட சட்டையணிந்து நம்மிடையே வந்த பரம்பொருள் சக்தியவர்என்று ஸ்ரீ அரவிந்தரே கூறியிருக்கிறார்**. அவருடன் என் மகளிருந்தாள்என்றால் அவள் பாக்யசாலி"என்று குரல் தழுதழுத்தார்.

''இப்படிப் பேசிப்பேசிதான் அவளைப் பைத்தியமாக்கி வைத்து இருக்கிறீர்கள். இனியும் நான் அவளைப் பிரிந்திருக்கமுடியாது. வாருங்கள் அங்கே போய்க் குழந்தையைப் பார்ப்போம். கையுடன் அழைத்து வந்துவிடுவோம்"என்று படபடத்தாள்.

அவளைச் சொல்லியும் குற்றமில்லை. **பாசத்தால் தன்னைப் பிணைத்துக்கொண்டு மனிதமனம் படும்பாடு பெரியது. இதைத்தான் பகவான் அறியாமையை விரும்பி நாடும் குணம் என்கிறாரோ?**

அவளைச் சமாதானம் செய்யமுடியாமல் ஆஸ்ரமம் அழைத்துவந்தார் காசி. ஆனால், அன்று தரிசனமில்லை. கேட்டில் நின்றுகொண்டு தம் மகளைப் பார்க்கவேண்டுமெனச் சொல்லியனுப்பினார்.



சாதகர் வந்து அன்னையிடம் கூறினார். அதற்கு அன்னை, "அவள் பிரியப்பட்டால் போகட்டும்"என்றார்.

பூமாவிடம் வந்து சாதகர் சொல்கிறார். "பூமா வெளியே உன் அம்மா வந்து உன்னைப் பார்க்கக் காத்திருக்கிறார்"என்று.

"அம்மாவா? என் அம்மா இங்கே உள்ளேயல்லவா இருக்கிறார்" என்கிறாள் பூமா.

சாதகர்க்கு ஒரே சங்கடம். "சரி, சரி, வா. வந்து அவர்களிடம் உன்னம்மா இங்கே உள்ளேயிருக்கிறார்என்பதை நீயே சொல்"என்கிறார்.

வெளியே வந்தாள் குழந்தை. அவள் பெற்றோர் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு, "வா, நம் வீட்டிற்குப் போவோம்"என்றனர்.

"நான் வரவில்லையம்மா. அப்பா நீங்கள் சொன்னதுபோல் இந்த அம்பாள் பேசும் அம்பாள்தான். அவர்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவர்களை விட்டு நான் எங்கும் வரமாட்டேன்"என்று உறுதியாய்க் கூறினாள்.

"உன் படிப்பு வீணாகிறது. பிறகு பள்ளிக்கூட விடுமுறையில் இங்கு வரலாம்"என்றார் அப்பா.

"இங்கே எனக்குப் படிப்பும் சொல்லித்தருகிறார்கள். வேலையெல்லாம் கற்றுக்கொள்கிறேன். எல்லாவற்றையும்விட இந்த அம்பாள் அடிக்கடி என்னை அழைத்துப் பேசுகிறார். என்னால் எங்கும் வரமுடியாது. நீங்கள் கவலைப்படாமல் போங்கள்"என்று நிறுத்தி, நிதானமாய்ப் பேசிவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. காசிநாதன் மனைவியைத் தேற்றுகிறார். "கனகா! உன் சென்ற பிறவியில் உன் பெற்றோர் யாரெனத் தெரியுமா?"என்றார் மனைவியிடம்.

''ஆமாம். இந்தப் பிறவியிலேயே என் மகளுக்கு என்னைத் தெரியவில்லை. சென்ற பிறவியில் என் பெற்றோரை எப்படித் தெரியும் எனக்கு? எனக்கு மட்டுமா? உங்கள் சென்ற பிறவியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா"என்றாள்.

''தெரியாது கனகா. நாம் இந்தப் பிறவியைமட்டும் அறிவதால் குளறுபடியில்லாமல் வாழ்கிறோம். நம் மகள் நம்முடன் இருந்தது அவளின் சென்ற பிறவி. அவள் இங்கு, இப்பொழுது புதிதாய்ப் பிறந்துவிட்டாள்".

❍❍❍

வீட்டில் செல்லமாய் வளர்ந்த குழந்தை பூமா. இன்னும் வீட்டு வேலைகள் பழகாத சிறுமியவள்.

“பூமா, இங்கே வா. இந்த தட்டுகளைக் கழுவி சுத்தம் செய்து வை”என்கிறார் ஷியாம். தன் பிஞ்சுக்கரங்களால் அந்தத் தட்டுகளை ஒவ்வொன்றாய் சின்னக்குழந்தையைத் தூக்குவதுபோல் எடுத்துத் தேய்க்கத் தொடங்கும்போதே கண்ணனின் புல்லாங்குழல் கேட்டு கைவேலையை நழுவவிடும் கோபியரைப்போல் திடீரென முகம் பிரகாசமடைய, மகிழ்ச்சி நிரம்பி, சின்ன வாயிதழில் சிரிப்பாய் மலர நிற்கிறாள். “என்ன செய்கிறாய் பூமா? சீக்கிரம் கொடுத்த வேலையைச் செய்’’என்ற ஷியாம் மாமாவைப் பார்த்து புன்னகைச்செய்கிறாள். அதற்குள் ‘பூமாவை உடனே அன்னை அழைக்கிறார்’என்ற செய்தி வருகிறது.

மிகுந்த மகிழ்ச்சியுடன் ஓடிவருகிறாள். அன்னையின் அறைவாயிலை அடைந்தவள் அப்படியே நின்றாள்.

“வா, வா, உள்ளே வா. ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்’’என்று உள்ளிருந்து அன்னை குரல் கொடுக்கிறார்.

‘கதவு மூடியிருக்கிறது. நான் வெளியே நிற்பது அவருக்கு எப்படித் தெரியும்? அம்பாளுக்குத்தான் எல்லாம் தெரியும்என்று அப்பா சொல்லியிருக்கிறாரே’என்று தானே கேள்வி கேட்டு, தானே பதிலும் கூறிக்கொள்கிறாள்.

பூனைபோல் மெல்ல அடிவைத்து உள்ளே வந்தாள்.

“என்ன செய்துகொண்டிருந்தாய்?”என்று அதிகாரமாய்க் கேட்டார்.

“பாத்திரம் கழுவுகிறேன்”என்றாள் மெல்ல.

“சரியாகச் செய்யவில்லைஎன்று திட்டு வாங்கியிருப்பாயே”என்றார்.

‘ஆமாம்’என்பதுபோல கண்ணை உருட்டித் தலையை அசைத்தாள்.

காதைத் திருகி, “கவனமாய்ச் செய்கிறாயா, இனி?”என்றார்.

‘சரி’என்பதுபோல் தலையசைத்தாள்.

“சரி, சரி, போ”என்றார்.



திரும்பி வந்து மீதி வேலையைச் செம்மையாய் விரைவாய் செய்துவிட்டாள்.

பூவைச் சுத்தம்செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பார்வதி இவளை அழைத்து அந்தப் பணியில் அவளையும் ஈடுபடுத்தினாள். பூவைக் கையில் எடுத்தவள் மந்திரத்தில் கட்டுண்டாற்போல் மயங்கி நின்றாள். இராமகிருஷ்ண பரமஹம்சருக்குப் பூவைப் பறிக்கும் நேரத்தில் அது சிவலிங்கமாய்க் காட்சிதர பறிக்காமல் விட்டுவிடுவாராம். இவளுக்கு, இதில் யார் காட்சி தந்தாரோ? பார்வதிக்குக் கோபம் வந்தது. “பூமா! கவனித்துச் செய்”என்று அதட்டினார். அந்நேரம், ‘உடனே பூமாவை அன்னை அழைக்கிறார்’என்ற செய்தி வரவே, விரைவாக மேலே அன்னையின் அறையை நோக்கி ஓடினாள்.

“வா, உள்ளே வா”என்கிறார் அன்னை.

பரவசத்துடன் உள்ளே செல்கிறாள். ‘‘என்ன செய்துகொண்டு இருந்தாய்?’’என்றார்.

“பூ சுத்தம் செய்தேன்”என்றாள்.

“எங்கே சுத்தம் செய்தாய்? மயங்கி நின்றுகொண்டிருந்தாய்”என்றார் கடுமையாக.

அவளுக்குச் சிரிப்பு வருகிறது. அடக்கிக்கொள்கிறாள்.

‘‘என்ன சிரிப்பு?’’என்று அதட்டலாய்க் கூறிக் கன்னத்தைக் கிள்ளினார்.

மனம்கொள்ளாத மகிழ்ச்சியை முகம் மலர்ந்து வெளிப்படுத்த நிற்கிறாள்.

“சரி, சரி. ஓடிப்போ”என்கிறார்.

திரும்பிவரும் அவளை, ‘‘அன்னை என்ன சொன்னார்?’’என்று ஒருவர் ஆர்வமுடன் கேட்க, ஒன்றும் கூறாமல் சிரித்துக்கொண்டே ஓடிவிட்டாள் (இதைத்தான் ‘கண்டவர் விண்டதில்லை’என்பார்களோ!).

‘‘என்ன சொல்வார்? கவனமில்லைஎனத் திட்டியனுப்பியிருப்பார்’’ என்றார் ஒருவர்.

“திட்டினால் அழுதுகொண்டல்லவா வரவேண்டும்? இவள் சிரித்துக் கொண்டல்லவா வருகிறாள்?”என்றார் வேறொருவர்.

“அவள்தான் எல்லாவற்றிற்கும் சிரிக்கிறாளே. அவள் எந்த வேலை கொடுத்தாலும் ஏதோவொரு நினைவோடு செய்கிறாள். அதுதான் உடனே அன்னை கூப்பிட்டனுப்புகிறார். திட்டாமல் வேறுஎன்ன செய்வார்” என்கிறார் ஒருவர்.

அவர்கள் பேச்சை மனதில் இரசித்துச் சிரிக்கிறாள்.

“பூமா, இந்தா இந்தச் செடிகளுக்குக் கவனமாய் நீரூற்று”என்று பூவாளியை அவளிடம் தருகிறார். அதைக் கையில் வாங்கியதும் வழக்கம்போல் ‘கண்ணில் தெரியுதொரு தோற்றம்’என்றாகிவிடுகிறாள். பிடியைச் சாய்க்காமல் பற்றியவண்ணம் மலைத்துநிற்கிறாள். அப்படி எதைத்தான் நினைத்து மயங்குவாள்? மயங்கும் வயதும்கூட இல்லை. பத்து வயது சிறுமியவள். கமல்நாத்திற்குக் கோபம் வருகிறது. “பூமா! நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?”என்று கடுமையாய்க் கேட்கிறார்.

அதே நேரம் ஒருவர் விரைந்து வந்து, “பூமா, உன்னை அன்னை கூப்பிடுகிறார்”என்று சொல்ல, மிகுந்த ஆர்வத்துடன் ஓடுகிறாள்.

வழக்கம்போல் அறைக்கு வெளியே தயங்கி நிற்கிறாள். “வா, வா, உள்ளே வா”என்கிறார் அன்னை.

“என்ன செய்துகொண்டிருந்தாய்?”என்று அதிகாரமாய்க் கேட்கிறார்.

“செடிகளுக்கு நீரூற்றிக்கொண்டிருந்தேன்”என்றாள் மெதுவாக.

“எங்கே நீரூற்றினாய்? வாளியைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தாய். கமல்நாத் திட்டினாரா?”என்றார்.

பதிலேதும் கூறாமல் அவரைப் பார்த்து வெட்கமாய்ச் சிரிக்கிறாள்.

“அடிக்கட்டுமா உன்னை?”என்கிறார்.

ஏதோ பாவனைக்காக கடிந்துகொள்வதுபோல் தோன்றுகிறது. ஒன்றும் பேசாது நிற்கிறாள். அவள் முகத்தின் பிரகாசம் உள்ளே பொங்கிவரும் ஆனந்தத்தின் அடையாளம்.

அவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு, “சரி, சரி. போய் வேலையை ஒழுங்காய்ச் செய்”என்கிறார்.

அவள் அன்னையிடம் போய் வந்தபிறகு மின்னலாய் வேலையைச் செய்து முடித்துவிடுகிறாள். ஏதோ கண்டிக்கிறார்என்று நினைக்கிறார்கள்.



ஆனால், அவள் திரும்பி வரும்போது அவள் முகத்தின் பிரகாசம், கொஞ்சியிருப்பாரோஎன்று நினைக்கத் தோன்றுகிறது. ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

*அடுத்த இதழில் தொடரும்.....*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் சரணாகதிஎன அழைப்பது மனம் நினைவாகச் சமர்ப்பணம் செய்து, தன்னால் தன் இருண்ட நிலையில் முடிந்தவரை முயலுவதாகும்.

***நம் சரணாகதி இருளின் பெருமுயற்சி.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

திருவுருமாற்றத்திற்கு ஆழ்மன ஆசையை விட, மேல்மன ஆசை அடங்கும். சட்டம் ஒன்றே. சோகமானவர் சோகத்தை விரும்புகிறார். ஆழ்மனப்பற்று அது.

***திருவுருமாற்றமும் திகைக்கும் ஆழ்மனப் பற்று.***

We regret to record that

**Dr. G. RANGASWAMI**

Member of our Working Committee passed away on the 7th Sep. 2005.

# Half an Hour with the Mother

Every day before you go out, if you stand or sit before The Mother and tell Her all that you are going to do that day, the day will be smooth, and most of the works, perhaps all, will be completed successfully. *It is an unfailing method for a long time to come.* Most people who are overwhelmingly successful, by the very process of their success, end up with a lot of problems that crop up every day. They preside over a vast empire but are imprisoned within a long chain of tangles. Such people enjoy solving even one of their problems. This method is greatly helpful to them. Those who have taken to this method are amazed at the relief it offers. After some time they forget to give half an hour to the Mother. The day is a disaster. The value of the method emerges.

Several people have taken this method from the man who devised it. This method has given one access to inaccessible people and their fat purse. Another person could become popular with a lot of politicians. A man who had been rejected by all the sections of his organisation at last discovered the value of this method which helped to build his own organisation bigger than all those who had frowned on him earlier. This is a powerful, useful method. It can offer a person every kind of social success he desires. Because it is a method, it begins to lose its power after some years. One forgets it. When speaking to Mother, the speech has no force or power. Frustration develops. For several reasons, we lose it.

What has given the power to this method? Why has it become dry after a while, even if it is a long while? **Its power issues out of our desire to relate to Mother. It loses its momentum because our attitude is one of seeking a benefit; it is mercenary**. Go beyond the method to its essence. The essence will be nebulous. Its results will be feeble. Yet continue to seek the essence. Build on it. Rest on it. Wait on it to acquire momentum. Put your sincerity to work. Ask for nothing. Don't think of the results. Concentrate on the inner essence. The essence is the real relationship with the Mother. Wait till your senses perceive it. Once you perceive it, value it for its own sake. Do not commit the sacrilege of mixing it with mundane benefits. **Be pure, offer sincerity. Utter Truthfulness is the ultimate significance. Delight in the seeking of it.**

— *Courtesy:* **New Indian Express**

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# பரம்பரைப் பண்பின் பக்குவம்

இந்தியாவில் இரயில் வந்த புதிது. சுமார் 150 ஆண்டுகட்குமுன், கம்பனி ஆட்சி நடக்கின்றது. தலைநகர் கல்கத்தாவில். தஞ்சாவூரில் சோழ ராஜ்ஜியம் சரபோஜி கையில் உள்ளது. கம்பனிக்குக் கப்பம் கட்டும் நிலை. சரபோஜி மகாராஜா கம்பீரமான தோற்றம். இவருக்குப் பின் வாரிசு நிர்ணயிப்பது கம்பனி கையில் கவர்னர் ஜெனரல் செய்யவேண்டும். ராஜா கேட்டுப்பெறும் நிலையிலுள்ளார். 3000 பேருடன் கப்பலில் கல்கத்தா வந்தார். கவர்னர் ஜெனரலைப் பார்க்கப் போனார். ராஜா உதவி கேட்க வருகிறார். அவர் தோற்றம் கம்பீரமானது. கவர்னர் ஜெனரல் எழுந்துநின்று வரவேற்றார். சபையே எழுந்தது. சரபோஜி கேட்டதை கவர்னர் ஜெனரல் கொடுத்தார். உதவி கேட்க வருபவரை எழுந்துநின்று வரவேற்று ஆலிங்கனம் செய்து கேட்டதைத் தந்தது பரம்பரைப் பண்பு.

ரூஸ்வெல்ட்டிற்கு இளம்பிள்ளை வாதத்தால் இரண்டு பக்கமும் (Crutch) கட்டையுடன் நடப்பார். நிற்பது கஷ்டம், வலிக்கும். ஹூவர் ஜனாதிபதி. ரூஸ்வெல்ட் அவரைப் பார்க்கவந்தால், வேண்டுமென்றே அவரை நெடுநேரம் நிற்கவைப்பார். வலியுடன் அவர் நிற்கவேண்டும். ரூஸ்வெல்ட் அடுத்த ஜனாதிபதியானார். முந்தைய ஜனாதிபதி இவரிடம் மட்டமாக நடந்துகொண்டவர். அவருக்கு செக்யூரிட்டி தருவது ரூஸ்வெல்ட் கையில். ஹூவருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. இருப்பினும் தம்மை அவமானப்படுத்திய ஹூவருக்கு செக்யூரிட்டி தர மறுத்துவிட்டார். அமெரிக்கர் புதுப்பணம் படைத்தவர்.

ஸ்ரீ அரவிந்தரிடம் வத்தல்என்ற சமையல்காரனிருந்தான். அவன் மந்திரவாதி. பகவான் வீட்டில் கல் விழ மந்திரம் செய்தான். அவரிருந்த அறைதவிர மற்ற எல்லா அறைகளிலும் கல் மச்சிலிருந்து விழுகிறது. யார்மீதும் விழவில்லை. அன்னை அக்கல் போடும் தேவதைகளை அழைத்து கற்களை நிறுத்தினார். மந்திரவாதி மரணப்படுக்கையிலிருக்கிறான்என்ற செய்தி பகவானுக்கு வந்தது.

மந்திரவாதிக்கு தன் மந்திரசக்தி தெரியும். பகவானைப்பற்றித் தெரியாது. அவர் சக்தியிடம் மோதினால் அவன் உயிர் போகும்என்பதை அவன் அறியான்.

பகவான் "இந்த கற்களுக்காக அவன் உயிரிழக்கவேண்டுமா?" என்றார். அவன் பிழைத்துக்கொண்டான். அது ஆன்மீகப்பண்பு. சரபோஜி பெற்றது பரம்பரைப்பண்பு. புதுப்பணம் பண்பு பெற பல தலைமுறைகளாகும்.

❀❀❀

# திருவடி நிழல்

அன்னையை அறிவது பாக்கியம், ஏற்பது அதிர்ஷ்டம், அன்னை நம்மை ஏற்பது அருள், அவர் ஏற்றதின் ஆன்மீகப் பெருமைக்கு ஏற்றவாறு நாம் உணர்விலும், செயலிலும் மாறுவது பேரருள்என்று பலவாறாக நாம் நம் மனநிலைகளை அறிவோம். பெண்ணின் அன்புக்கு மனத்தைப் பறிகொடுத்தவன் தன்நிலை இழந்தவன். உலகம் அதைக் காதல்எனக் கூறும். அவன் கசிந்துருகுவான். அவன் உருக்கம் அவனது உள்ளத்தின் பெருக்கம். அன்னையிடம் மனத்தைப் பறிகொடுத்தான். அன்னை அதை ஏற்றதை நெஞ்சால் உணர்ந்தவன் தன் மனத்தின்பின் நெஞ்சும், அதனைத் தொடர்ந்து ஜீவனும் அன்னையை அடைந்ததைக் காண்பான். அவன் அன்பன்.

✡ **அவ்வன்பன் நல்லது, கெட்டதைக் கடந்தவன்.**

**அவன் உயர்வு, தாழ்வைத் தாண்டிவந்தவன்.**

**பாவ, புண்ணியங்கள் அவனுக்கில்லை.**

**அப்படிப்பட்ட அன்பர் உள்ள இடத்தில், அருள் ஜீவனோடிருக்கும்.**

**அவர்முன் கெட்டது நல்லதாக மாறும்;**
**தாழ்வு உயர்வாக உயரும்;**
**பாவம் புண்ணியமாகத் திருவுருமாறும்.**
**நரகம் அவரால் சொர்க்கமாகும்.**

✡ **''மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிளவேனிலும்போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழல்''என்ற நாயனார் சொல் நடைமுறை உண்மைஎன அறிவோம்.**

❀❀❀